# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 106 மாசி 29ஆம் நாள் புதன்கிழமை 13 மார்ச் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



# ஜெனிவாவில் எதிரொலிக்கும் இலங்கையின் குத்து வெட்டு!

## மைத்திரி – ரணில் ஏட்டிக்குப் போட்டி



கொழும்பு, மார்ச் 13

இலங்கை அரசியலில் காணப்படும் முரண்பாடுகள் ஜெனிவாவிலும் எதிரொலிக்கின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐ.நா. தலையீடு தேவையில்லை என்ற நிலைப்பாட்டிலும், ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஐ.நாவுடன் இணங்கிச் செல்லும் நிலைப்பாட்டிலும் உள்ளன. தற்போது ஜெனிவாவில் அமர்வுகள் ஆரம்பித்துள்ள நிலையில் இங்குள்ள அரசியல் முரண்பாடுகள் அங்கும் எதிரெலிக்க ஆரம்பித்துள்ளன. 21



## மகிந்தவுக்கு எதிரான மனுவை திரும்பப் பெற்றது ரணில் தரப்பு

கொழும்பு, மார்ச் 13
மகிந்த ராஜபக்ச உட்பட 49 பேருக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த யாதுரிமை எழுத்தாணை 21

## மனநலப் பரிசோதனை சபையினருக்கு தேவை

மாநகர சபை அமர்வில் ரெமீடியஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சிலருக்கு மனநல மருத்துவ பரிசோதனை 21

## இலங்கைக்கு மீளவும் அவகாசம் வேண்டாம்

பிரதி முதல்வரின் தீர்மான வரைவை நிராகரித்தார் முதல்வர் ஆனல்ட்
யாழ். மாநகர சபையில் நேற்றுக் குழப்பம்

(பக்கம் - 16)

## பரிந்துரைகளை சமர்ப்பித்த முன்னாள் உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13
வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர்கள் வடக்குமாகாண ஆளுநரிடம் 21

## இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க பிரிட்டன் - ஜேர்மனி கைகோர்ப்பு!

- தீர்மானத்தைச் செயற்படுத்துமாறு புதிய தீர்மானம்
- மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம்
- கனடா, அயர்லாந்து நாடுகள் இணை அனுசரணை

கொழும்பு, மார்ச் 13
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி பிரிட்டனும், ஜேர்மனியும் இணைந்து புதிய தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளன. இந்தப் புதிய தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டுள்ளது.
இந்தத் தீர்மானத்துக்குக் கனடா, 21

## இலங்கைத் தமிழன் இருக்கும் வரை தமிழை யாராலும் அழிக்க முடியாது

நடிகர் விவேக் பாராட்டு

மட்டக்களப்பு, மார்ச் 13
உலகில் கடைசி இலங்கை தமிழன் இருக்கும் வரையிலும் தமிழை யாராலும் அழிக்க முடி' 21



## தீயில் எரிந்து வீடு முற்றாக நாசம்

முல்லைத்தீவு, மார்ச் 13
முல்லைத்தீவு, செல்வபுரத்தில் வீடொன்று தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந் 21

## நான்கு திக்குகளில் தமிழ் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 13
ஐக்கிய தேசிய முன்னணியின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் 21

## கோடீஸ்வரன் மீது நடவடிக்கை

ரெலோ அமைப்பு கூறுகிறது. 05

## அரசியல் தீர்வு இன்றி அபிவிருத்தி ஏற்படாது

நாடாளுமன்றில் சம்பந்தன் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 13
தமிழ் மக்களும் இலங்கையர்கள் என்றும் இலங்கையே அவர்களது நாடு என்றும் உறு 21

## 11 பேர் கொலை கரன்னகொட ஒப்புதல்!

கொழும்பு, மார்ச் 13
கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய கடற்ப 06

## விபத்தில் சிக்கிய மூதாட்டி உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 13
புதுக்குடியிருப்பு, மந்துவிலில் கடந்த 9ஆம் திகதி நடந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் 21

## "பட்ஜெட்" இரண்டாம் வாசிப்பு 43 வாக்குகளால் நிறைவேற்றம்

த.தே.கூ., த.மு.கூ., இ.தொ.க. ஆதரவு
மகிந்த அணியின் முயற்சி பிசுபிசுப்பு

கொழும்பு, மார்ச் 13
ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 43 மேல 05



## பேரணிக்கு வலுச் சேர்க்க வடக்கில் ஊர்திப் பவனி!

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை நடத்தப்படவுள்ள பேரணிக்கு வலுச் சேர்க்கும் வகையில் இனப் படுகொலையைக் காட்சிப்படுத்தும் ஊர்திப் பவனி ஒன்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்த ஊர்திப் பவனி நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்து புறப்பட்டது. இந்த ஊர்தி 06

## மொட்டுக் கட்சியிலிருந்தே அரச தலைவர் வேட்பாளர்!

மகிந்த ராஜபக்ச திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 13
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்தவரே வேட்பாளராகக் களமிறங்குவார் என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.
எம்பிலிப்பிட்டியவில் அமைக்கப்பட்ட விருந்தினர் விடுதி ஒன்றின் திறப்பு விழா 21

## எரிபொருள் விலையில் திடீரென்று அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 13
நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது 06

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## கடக ராசி அன்பர்களே!

*13.2.19 முதல் 31.8.20 வரையிலான காலகட்டத்தில், ராகு ,கேது சஞ்சாரம், பல நல்ல தீர்வுகளை உங்களுக்கு அளிக்கப்போகிறார்கள்.*



**ராகு பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசியில் அமர்ந்து கொண்டு திக்கு திசையறியாது திண்டாட வைத்ததுடன், காரணகாரியமே இல்லாமல் பிரச்சினைகளில் சிக்கவைத்த ராகு, இப்போது ராசிக்குப் பன்னிரண்டாம் வீட்டுக்கு வந்து அமர்கிறார்.

ஆகவே, நிம்மதி பிறக்கும். அடிக்கடி தலை வலி, முதுகுவலி, கால் வலி என முடங்கிய நீங்கள், இனி நோயிலிருந்து விடுபட்டு முக மலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். தைரியம் கூடும். எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். இனி நிம்மதியாக உறக்கம் வரும்.

மற்றவர்களுக்கு உதவப் போய் நீங்கள் பிரச்சின்னகளில் சிக்கித் தவித்தீர்களே! அந்த நிலை இனி மெல்ல மெல்ல மாறும். குடும்பத்தில் பிரச்சினைகள் அனைத்தும் விலகி, சந்தோஷம் குடிகொள்ளும்.

சந்தேகத்தாலும், வாக்குவாதத்தாலும் பிரிந் திருந்த கணவன், மனைவி ஒன்று சேர்வீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். வீட்டில் அடுத்து கல்யாணம், கிரகப் பிரவேசம் என நல்லதெல்லாம் நடந்துக் கொண்டேயிருக்கும். தூரத்து உறவினர்கள் உங்கள் வீடு தேடி வருவார்கள்.

தாயாருக்கு இருந்து வந்த மூட்டு வலி விலகும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிமாவட்ட புண்ணிய ஸ்தலங்களுக்குக் குடும்பத்துடன் சென்று வருவீர்கள். பிள்ளை களிடம் பாசமாக நடந்து கொள்வீர்கள். அவர் களின் உயர் கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள்.

உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகளை அயல் நாட்டுக்கு அனுப்பி வைப்பீர்கள். உடன் பிறந்தோர் இனி ஒத்தாசை யாக நடந்து கொள்வார்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து வந்த சிக்கல்கள் விலகும். இயக்கம், சங்கம், ஆகியவை சார்ந்த மதிப்பான பதவிகள் தேடி வரும்.

கன்னிப்பெண்களுக்கு உடல்நலன் சீராகும். சோர்வுகள் நீங்கி சுறுசுறுப்பு அதிகரிக்கும். சகலத்திலும் மனம் ஈடுபாடு கொள்ளும். தூக்கமின்மை நீங்கும். கல்யாணம் நடக்கும். அரசியல்வாதிகள் தன் பலத்தை நிரூபித்துக் காட்டி தலைமையிடத்தில் நல்ல பெயர் எடுப்பார்கள். உங்களில் சிலர், வாகனத்தை மாற்றுவீர்கள். சகாக்களுக்கு மத்தியில் உங் களின் தகுதி உயரும்.

வியாபாரத்தைத் தொடர முடியாமல் பெரும் திண்டாட்டத்துக்கு ஆளானீர்களே... இனி, புது முதலீடுகள் செய்ய பணம் வரும். புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். மிகச் சமர்த்தியமாக செயல்பட்டு பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். போட்டியாளர்களை அனுபவ அறிவால் வெல்வீர்கள். சிலர், வேலையாள்களை மாற்றிவிட்டு புதிய பணியாளர்களை அமர்த்துவீர்கள்.

ஏற்றுமதி, இறக்குமதி வகையால் அதிக லாபம் கிடைக்கும். கூட்டுத்தொழிலில் புது முதலீடுகளைச் செய்வீர்கள்.



உத்தியோகத்தில் நெடுங்காலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வும் சம்பள உயர்வும் இப்போது கிடைக்கும். இதுவரையிலும் உங்களுக்கு இடைஞ்சல்கள் விளைவித்துவந்த சக ஊழியர்கள் இனி நட்புக்கரம் நீட்டுவார்கள்.

கணினித் துறையினருக்கு வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து புதிய வாய்ப்புகள் கிடைக்கும் அதன் மூலம் ஒளிமயமான எதிர்காலம் வாய்க்கும்.

கலைஞர்களுக்குக் கவலைகள் நீங்கும். இனி கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களைச் சுறுசுறுப்புடன் செயலாற்றவைக்கும். அத்துடன், பெரும்புகழையும் பொருளாதார உயர்வையும் அளிப்பதாக அமையும். ஆகவே, வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசிக்கு ஏழாவது வீட்டில் இருந்துகொண்டு, உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் இடையே ஏகப்பட்ட வாக்குவாதங்களையும், சண்டை சச்சரவுகளையும், உடல் நலக்குறைவையும் அடுக்கடுக்காக தந்து உங்களை வாட்டிவதைத்த கேது பகவான், இப்போது ராசிக்கு 6ஆம் வீட்டில் அடியெடுத்து வைக்கிறார்.

ஆகவே, பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களைக் கண்டறிந்து அகற்றும் சக்தியைக் கொடுப்பார். குடும்பத்தில் இனிய சூழல் உருவாகும். சந்தேகத்தாலும், ஈகோ பிரச்சினையாலும் பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவார்கள். பிள்ளைக ளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள். விலகிச் சென்றவர்கள், இனி வலிய வந்து பேசுவார்கள்.

எதிரிகள் பலவீனமடைவார்கள். வழக்கு சாதகமாகும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். இழுபறியான பணிகள் முழுமையடையும். புத்தி சாதுர்யத்துடன் பேசி, சில வேலைகளை முடிப்பீர்கள். கையில் பணம் தங்கும். பழைய கடனைப் மீளச் செலுத்துமளவுக்கு வருமானம் கூடும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். சொந்தபந்தங்களுக்கு மத்தியில் உங்களின் தகுதி உயரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். மதிப்பான பதவிகள் தேடிவரும்.

வியாபாரத்தில் போராட்டங்கள் நீங்கும். கடையை வேறிடத்துக்கு மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களின் தேவைகளை உணர்ந்து பொருள்களைக் கொள்முதல் செய்வீர்கள்.

உத்தியோகத்தில், உங்களை வெறுத்த மேலதிகாரி இனி வலிய வந்து பேசுவார். உங்களின் கடின உழைப்புக்காகப் பதவியுயர்வு, சம்பள உயர்வெல்லாம் உண்டு.

(தொடரும்)

# நீங்கள் இந்த கிழமைகளில் பிறந்தவர்களா?




ஜோதிடத்தால்' ஒருவர் பிறந்த கிழமையை வைத்து அவர்களின் குணநலன்கள் எப்படி இருக்கும் என்பதை கூறி விடலாம்.

**ஞாயிற்று கிழமை**

ஞாயிற்று கிழமையில் பிறந்தவர்கள், எதிர்கால வரலாற்றில் இடம்பெற வேண்டும் என்று நினைப்ப வர்கள். ஆனால் ஒரு சிலர் அவசரக் காரர்களாகவும், காரியங்களை அரைகுறையாகச் செய்பவர்களாகவும் விளங்குவர். இவர்கள் உல்லாசப் பயணத்தில் அதிக பிரியம் மற்றும் பத்திரிகை, திரைப்படம், அரசியல் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்கள். இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் விரதமிருந்து, சூரியனை வழிபட்டால் நல்ல அதிர்ஷ்டமான வாழ்க்கை அமையும்.

**திங்கள் கிழமை**

திங்கள் கிழமையில் பிறந்தவர்கள், அறிவுப் பூர்வமாக சிந்தித்து செயல்படுபவார்கள். பிறர் செய்ய முடியாத காரியங்களை, எளிதில் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டிருப்பார்கள்.

எந்தவொரு விடயத்திலும் நன்கு யோசித்த பின்பே அதில் ஈடுபடுவார்கள். நீதி, நேர்மை மிக்கவர்கள், கலைத்துறையில் அதிக ஈடுபாடு இருக்கும். இந்த கிழமையில் பிறந்தவர்கள் திங்கள் தோறும் அம்பிகையை வழிபட்டு பவுர்ணமி விரதம் இருந்தால் அதிர்ஷ்ட பலன்களைப் பெறலாம்.

**செவ்வாய்கிழமை**

செவ்வாய் கிழமையில் பிறந்தவர்கள் வீரமும், விவேகமும் மிக்கவர்களாக இருப்பார்கள். எந்த வேலையையும் முழுமையாக செய்வார்கள்.

ஆனால் இவர்கள் சேமிக்கும் இயல்பு இல்லாதவர்கள். அதிக கோபம் காரணமாக அல்லல் படுவார்கள். இந்த கிழமையில் பிறந்தவர்கள் சஷ்டி விரதம் இருந்து சண்முகனை வழிபட்டால் சகல பாக்கியங்களை பெறலாம்.

**புதன்கிழமை**

புதன் கிழமையில் பிறந்தவர்கள் புத்திசாதுரியத்துடன் விளங்குவார்கள். ஆனால் இவர்கள் அடிக்கடி திட்டங்களை மாற்றிக் கொண்டிருக்கும் பழக்கம் கொண்டவர்கள். புதுமையை விரும்பினாலும், பழமையை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்பவர்கள். இந்த கிழமையில் பிறந்தவர்கள் ஏகாதசி விரதம் இருந்து விஷ்ணுவையும், லட்சுமியையும் வழிபடுவது மிகவும் நல்லது.

**வியாழன்கிழமை**

வியாழன் கிழமையில் பிறந்தவர்கள் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வார்கள். ஆனால் இவர்கள் கோபமாக இருக்கும் போது சமாதானப்படுத்துவது மிக சிரமம்.

கூர்மையான அறிவும், எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றலும் பெற்றவர்கள்.

இந்த கிழமையில் பிறந்தவர்கள் வியாழன் தோறும் விரதம் இருந்து குரு தட்சிணா மூர்த்தியை வழிபட்டால் வாழ்க்கை சிறப்பாகும்.

**வெள்ளிக்கிழமை**

வெள்ளிக் கிழமையில் பிறந்தவர்கள் குறைவில்லாத செல்வங்களைப் பெற்று வாழ்பவர்கள். இவர்களுக்கு கலை, இலக்கியம், சினிமா, நடனம் ஆகியவற்றில் ஆர்வம் இருக்கும்.

ஆனால் இவர்கள் மற்றவர்களைக் கேலி பேசுவதில் அலாதி பிரியம் உடையவராக இருப்பார்கள்.

இந்த கிழமையில் பிறந்தவர்கள் வெள்ளிக் கிழமை தோறும் லட்சுமியை வழிபடுவதன் மூலம் இவர்களின் வாழ்க்கையில் செல்வ நிலை உயரும்.

**சனிக்கிழமை**

சனிக் கிழமையில் பிறந்தவர்கள், எதற்காகவும் கலங்க மாட்டார்கள். பிறருக்கு கட்டளையிடும் சக்தியைப் பெற்றிருப்பார்கள். மனதை அடக்கியாளும் தன்மை கொண்ட இவர்களுக்கு நீடித்த நட்பும், பகையும் இருக்காது.

இந்த கிழமையில் பிறந்தவர்கள் சனிக் கிழமை தோறும் விரதம் இருந்து விநாயகப் பெருமான், சனி பகவான் மற்றும் அனுமனை வழிபட்டு வந்தால், செல்வ செழிப்புடன் வாழலாம்.

CANE

# கேன் காப்பகம்
## இல.05, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்

கேன் காப்பகம் புற்றுநோயாளர்களைப் பராமரிக்கும் நிறுவனம் மட்டுமன்றி வீடுகளில் தங்கியிருக்கும் புற்றுநோயாளிகளைப் பராமரிக்கும் நிறுவனமாகவும் உள்ளது. இக் காப்பகமானது பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு விண்ணப்பங்கள் கோருகின்றது.

**01) Health Care Assistant (சுகாதார பராமரிப்பு உதவியாளர்)**

அங்கீகரிக்கப்பட்ட சுகாதார கற்கை நிறுவனத்தில் பெறப்பட்ட 1 வருட பயிற்சிக்கான சான்றிதழ் **(Certificate in Health Care Assistant or Certificate in Nursing Aid )** மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிறுவனத்தில் ஒருவருடம் வேலை செய்தமைக்கான சான்றிதழும் தகைமையாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**02) சமையலாளர் / சமையல் உதவியாளர்**

இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் சமையல் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். அத்துடன் 25 பேருக்கு சமையல் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**03) தற்காலிக சாரதி**

அனைத்து வகை இலகு ரக வாகனங்களுக்குமான சாரதி அனுமதிப் பத்திரமும், குறைந்தது 3 வருடம் ஒரு நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**முன்னுரிமை**

கேன் புற்றுநோயாளர் காப்பகத்துக்கு 5 மைல் சுற்றளவுக்குள் இருப்பவர்கள்.
தொலைசேி அழைப்பின் அடிப்படையில் எந்நேரமும் செயற்பட ஆர்வமுள்ளவர்கள்.


**விண்ணப்ப முடிவு திகதி :- 30.03.2019**
**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :-**

**தலைவர்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
**இல.05, சபாபதிப்பிள்ளை வீதி,**
**உடுவில் சுன்னாகம்.**

**குறிப்பு:- கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.**

(CS/23958)(11,17)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தவரட்ணம் மகிமராஜா
(ராசன்)

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"
என்ற பொய்யா மொழியின் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே...
எங்கே போய்த் தேடுவோம் ஐயா....
உங்கள் கனிந்த முகத்தையும் மென் சிரிப்பையும்

**என்றும் உங்கள் நினைவில்**

**மனைவி - ம.சிவகனி,**
**மகன் - ம.சரண்யன்**
**மற்றும் சகோதரர்கள்**
**இல.58, அம்மன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**

பூலோகம் 10.02.1971
பரலோகம் 13.03.2017

(CS/23960)(11.17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 26.04.1954
மறைவு 12.02.2019

## அமரர் கனகசபை சிவபாதம்

அமரர் கனகசபை சிவபாதம் அவர்களின் இறுதிச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும். தொலைபேசி மூலமும் இணையதளம் மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தோருக்கும் நோய் வாய்ப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மருத்துவ உதவிகள் புரிந்த வைத்தியர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.03.2019) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**புற்றளை, புலோலி தெற்கு,**
**புலோலி.**

**குடும்பத்தினர்.**
**077 875 9719**

(ANE/751)(11,17)

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

# உங்கள் ஏற்றுமதி இறக்குமதி வியாபார நடவடிக்கைகளுக்கு புதிய உத்வேகம் - புதிய சௌகரியம் - புதிய சேவை

நீங்களும் ஏற்றுமதி இறக்குமதி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவரா?
இல்லையெனில் அதை ஆரம்பிக்கும் ஆர்வம் கொண்டவரா?
ஏற்றுமதி இறக்குமதி துறையில் முதன்மை வகிக்கும் வங்கியான சம்பத் வங்கி தற்போது மற்றுமொரு புதிய சேவையுடன் பரிபூரணத்துவமிக்க சேவையினை உங்களுக்காக வழங்க தயாராக இருக்கின்றது. அதற்கிணங்க இன்றே ஹசிக அல்லது அமிலவிற்கு அழைப்பினை ஏற்படுத்தி நாம் வழங்கும் விசேட சேவையை அனுபவித்திடுங்கள். உங்கள் வியாபாரத்தை மென்மேலும் மேம்படுத்திடுங்கள்.

- உங்கள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தின் செலவினை குறைத்துகொள்வதற்கான ஆலோசனை
- முதல் படிமுறை முதல் இறுதி படிமுறை வரையில் ஏற்றுமதி இறக்குமதி வங்கி நடவடிக்கைகளுக்கான தீர்வுகள்
- மிகவும் உகந்த ஏற்றுமதி இறக்குமதி கொடுப்பனவு முறைகளை அறிமுகப்படுத்தல்
- வியாபார நெருக்கடி சந்தர்ப்பங்களை கண்டறிதல் மற்றும் அதனை குறைத்துக்கொள்வதற்கான ஆலோசனைகள்.



ஹசிக
0765 789 104




அமில
0765 265 090



www.sampath.lk Sampath Bank Fitch Ratings A+(lka)

DentsuGrant

## 52வது ஆண்டு அமரத்துவ அஞ்சலி



அமரர்

**வேலன் தம்பிராசா**

ஐயா நீங்கள் விதைத்த விதைகள்
நிழல் தரும் பெரு விருட்சங்களாயிற்று
வருடங்கள் ஐம்பத்திரண்டு வந்து
போனாலும் ஐயா உங்கள் திருவடித்
தாமரைகளை
என்றும் நினைத்தே வாழ்ந்திடுவேன்.

மலர்வு 1907 உதிர்வு 1967

நீங்காத நினைவுகளுடன்
திருமதி சாரதா ஜெயராசா
(மகள்)

"தெய்வநிழல்"
மல்வம்,உடுவில்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி ஜெயராசா**

தோற்றம் 07.12.1938 மறைவு 22.02.2018

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

திதி: ஸப்தமி


ஆண்டு ஒன்று நகர்ந்து மறைந்தாலும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே
மாண்டுவிடவில்லை நீங்கள்
எம் மனங்களில் மறையாது
என்றும் வாழ்கின்றீர்கள்
எம் உயர்வுக்கு உன்னத வழிகாட்டிய
அன்பு அப்பாவே உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்து வாழும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"தெய்வநிழல்"
மல்வம்,
உடுவில்

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடராசா



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடராசா நேற்று (12.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - சூடாமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் வைரமுத்து நடராசாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்,ஐயாத்துரை,துரைராசா, கனகராசா, பராசக்தி, நாகலட்சுமி மற்றும் கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் வாசுகி, மகேஸ்வரன் (ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவச் செல்வன் (சுவர்ண ஹாட்வெயார், கிளிநொச்சி), கல்யாணி (ஆசிரியை - யாழ். புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் பிரியங்கன், ஹபிசாத், தயானி, சதுர்ஷிகா, சாம்பவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு

*(ஓய்வுபெற்ற ஆசிரியை -*
*சிங்கள மகா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)*



பிறப்பு 31.12.1927 இறப்பு 12.03.2019

40/4, கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி மனோகரா திருநாவுக்கரசு நேற்று (12.03.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சாமுவேல் சிதம்பரப்பிள்ளை - புஸ்பம் ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரஸ்வதியின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான மண்டைதீவைச் சேர்ந்த அருணாசலம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக் கரசுவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கனகரத்தினம் ம. ம. வி.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஸ்பராஜா மகேந்திரன் மற்றும் புஸ்பதேவி மனோரஞ்சிதம், புஸ்பாமிர்தம் மனோசக்தி, புஸ்பராகம் மனோலயம், காலஞ்சென்ற புஸ்பாலயம் மனோஞானம் மற்றும் சரோஜினி, பூவேந்திரன், புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலாநிதி ஈஸ்பரகாந்தன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திரலோசினி (ஓய்வுபெற்ற ஆசிரியை - கனகரத்தினம் ம.ம.வி.) மற்றும் லக்ஷ்மி காந்தி (ஆசிரியை - கொழும்பு அல்கிக்மா கல்லூரி), கதிர்காமநாதன் (கல்வி வலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாதேவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உமாகாந்தன் மற்றும் கண்ணுத்துரை, யாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும் திருக்குமரன் (ஆசிரியர் - நெல்லியடி மத்திய கல்லூரி), ஐங்கரன் (சிங்கப்பூர்), உமையாள் (ஆஸ்திரேலியா முன்னாள் ஆசிரியை - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), கௌதமி (ஆசிரியை - ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி), தர்மினி (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), ஜனார்த்தன், ஜனனி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் டாருனியா, மிருனியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2019) வியாழக் கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**40/4, கோவில் வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)



பிறப்பு 05 . 06 . 1950

இறப்பு 12 . 03 . 2019

## சின்னத்துரை சந்திரசேகரம்

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சந்திரசேகரம் நேற்று (12.03.2019) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மனோன்மணி தம்பதிகளின் பாசமிகு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஞானசேகரம், ஞானசோதி, ஞானகௌசலா, ஞானசோபிகா மற்றும் ஞானசீலன், ஞானகலாஜா, ஞானசோபனா, சடாச்சரன், பானுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் குணசேகரம், சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவி, சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாமதி, குமாரதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் யாழவன், சுலக் ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23970/15/17)



## வலைப்பின்னல்

ஒபாமா தனது 55 ஆவது வயதில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

ஆனால் ட்ரம்ப் தனது 70 வது வயதில் தான் அதிபர் ஆகிறார்

பில்கேட்ஸ் தனது 30 வயதுகளிலேயே உலகின் பெரிய செல்வந்தர் ஆனார்.

ஆனால் INDITEX SPAIN நிறுவனத்தை தனது 50 ஆவது வயதில் தான் தொடங்கி அமான்சியோ ஓர்டேகா 80 வயதில் தான் உலகின் இரண்டாவது பெரிய செல்வந்தர் ஆனார்.

இளமை காலங்களில் வாய்ப்பு கிடைக்காமலும் சரியான திரைப்படங்கள் அமையாமலும் தடுமாறிய விக்ரமிற்கு 34 வது வயதில் தான் சேது படம் அமைந்து திருப்பத்தை ஏற்ப டுத்தியது.

24 வயதில் திருமணம் செய்த ஒருவர் தனது 30 ஆவது வயதில் இறந்தார்.

தனது 40 வயதில் திருமணம் செய்தவர் தற்போது 62 வய தில் உடல் நலத்துடன் உள்ளார். தன்து மகளுக்கு தெம்பாக வரன் பார்த்து வருகிறார்

எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது.

எனவே உங்களுக்கு ஒன்று கிடைத்து விட்டால் அது கிடைக் காமல் போராடும் மற்றவரை ஏளனம் செய்யாதீர்கள்.

உங்களை மற்றவரோடு சதா ஒப்பிட்டு உங்களிடம் இல்லா ததை நினைத்து புலம்பாதீர்கள்.

யார் கண்டது.
அடுத்த நொடி நமக்கு என்ன நடக்கும் என்று. இந்த உல கமே ஒரு பெரிய விபத்தால் உருவானது தான்.

எனவே எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை எல்லாம் கட்டுப்ப டுத்த நினைப்பது முட்டாள்தனம்.

இங்கே இப்போது இந்த நொடியில் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்களோ அதை முழுமையாக விழிப்புணர்வுடன் செய்யுங்கள்.

அடுத்த நொடி நிச்சயம் அழகாய் மலரும்.
தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்து கொள்ள முடியும்

## ருவீற்ஸ்

கோழியின் கிறுக்கல்!! @Kozhiyaar
அடிக்கிற வெயிலுக்கு ஹெலிகாப்டரோட விசிறி வாங்கி மாட்டினால் கூட பத்தாது போல!!!

சரவணன் Ucfc @saravananucfc
எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேச வைக்குது கூகுள்.

சிலந்தி™ @nandhu_twitts
குடும்பத்தில் ஒருவராகி விட்டார்கள் சீரியல் நடிகர்கள்.

ச ப் பா ணி @manipmp
நம்மைப் பார்த்து
கண்ணாடி சொல்லும் ஒரே குறை..
"உடம்பைக் குறை" என்பது

செல்லும் செல்லமும்...'mohanram.ko
''@mohanramko'
'மீனவர்களுக்கு என்றுமே உதவாக்'கரை'யாக இருந்ததில்லை. கடல்




## கோடீஸ்வரன்...

யாழ்ப்பாணம், மார்ச் 9

கட்சியின் முடிவுக்கு மாறாக வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் வாக்க ளித்தமையால் அவர் மீது ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது என்று ரெலோ அமைப்பின் செயலர் நாயகம் நா.சிறிகாந்தா தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. அதில் 43 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பின்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவு - செல வுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்க ளித்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி யான ரெலோ அமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் இருவ ரில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வாக் கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை. மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆதர வாக வாக்களித்திருந்தார்.

அதேவேளை, ரெலோ அமைப் பின் மத்திய குழுக் கூட்டத்தில் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்ப தில்லை என்று தீர்மானிக்கப்பட்டி ருந்தது. அரசியல் குழுக் கூட்டத்திலும் அவ்வாறே தீர்மானிக் கப்பட்டிருந்தது. வடக்கு - கிழக்கில் அதிகளவு இராணுவம் நிலை நிறுத் தப்பட்டுள்ளமை, இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடு என்பன போன்ற காரணங்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் தெரி விக்கப்பட்டிருந்தது.

நேற்று வாக்கெடுப்பு நடைபெறவி ருந்த நிலையில், நேற்றுக் காலை யும் இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனுக்கு நினைவூட்டியிருந்தபோதும் அவர் ஆதரவாக வாக்களித்துள்ளார் என்று ரெலோ அமைப்பின் செய லாளர் நாயகம் தெரிவித்தார்.

கட்சியின் முடிவைப் புறந்தள்ளி அவர் நடந்துள்ளதால் அவர் மீது பாரபட்சமின்றி ஒழுக்காற்று நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-26)

## "பட்ஜெட்"...

திக வாக்குகளால் நேற்று நிறை வேற்றப்பட்டது. இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதர வாக 119 வாக்குகளும், எதிராக 76 வாக்குகளும் பதிவாகின.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு, தமிழ் முற் போக்கு கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதர வாக வாக்களித்தன. மைத்திரி - மகிந்த கூட்டணியான ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியும், மக் கள் விடுதலை முன்னணியும் எதிர்த்து வாக்களித்தன.

நாடாளுமன்றம் நேற்று முற்ப கல் 9.30 மணிக்கு சபாநாய கர் கரு ஜெயசூரிய தலைமை யில் கூடியது. தினப் பணிகள் முடிந்த பின்னர் முற்பகல் 10.20 மணி முதல் வரவு - செலவுத் திட்டத்தின் இரண் டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது. விவாதங்களின் பின்னர் மாலை 6 மணிக்கு இரண் டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் 43 மேலதிக வாக்குகளால் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

இன்று முதல் அமைச்சுக்களுக் கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதம் (மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம்) நடைபெறவுள் ளது. அதற்காக 19 நாள்கள் ஒதுக் கப்பட்டுள்ளன. அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரவு -செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெ டுப்பு நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி சமர்ப் பித்துள்ள வரவு - செலவுத் திட்டத் தைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகிந்த ராஜ பக்ச தரப்பினர் தொடர்ச்சியாகக் கருத்துத் வெளியிட்டு வந்தனர். எனினும் அவர்களின் முயற்சிகள் பிசுபிசுத்துப் போயுள்ளன.

அதேவேளை, மகிந்த அணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடா ளுமன்ற உறுப்பினர்களான ஆறு முகம் தொண்டமான், முத்து சிவ லிங்கம் ஆகியோரும் வரவு - செல வுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்க ளித்துள்ளனர். மைத்திரி அணியி னர் சிலர் வாக்கெடுப்பில் பங்கேற் காது தவிர்த்துள்ளனர். (எ)

**அச்சக மெசின் விற்பனைக்கு**
சொலொனா மெசின், டேவிட்சன் மெசின், கட்டர் விற்பனைக்கு உண்டு.
**தயா அச்சகம் 575, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (நாச்சிமார் கோவிலடி) 077 396 5214**

**நாகபூஷணி திருமண சேவை**
மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306/077 138 7596**

**விருந்தினர் விடுதிக்கு வேலையாள்கள் தேவை**
**யாழ். நகரில் உள்ள விருந்தினர் விடுதிக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.**
- வரவேற்பாளர்கள்
- Room Boys
- சுத்திகரிப்பாளர்கள்

(தங்கிநின்று வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
**ஆர்வம் உள்ளவர்கள் இன்று (13.03.2019) புதன்கிழமை மு.ப 9.00 - 1.00 வரை நேரில் சமூகம் தரவும்.**
**Es printers**
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**வேலைவாய்ப்பு**
**Northern Group of Company**
**யாழ்.மண்ணில்! - புதிய கிளைக்கு** ஆண், பெண் இருபாலா ருக்குமான பதவி வெற்றிடங்கள்.
**தகைமைகள்** :- O/L, A/L கற்றவர்கள். உடல் உள ஆரோக்கிய முள்ளவர்கள்.
**வயதெல்லை:**- 18 - 30 வரை.
No:646, 1st Flour, Hospital Road, Jaffna.
Contract:- **021 790 4574, 077 518 9963**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலகில் கலாசார அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் **திருமதி அன்பரசி அருட்செல்வன்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி அன்னப்பிள்ளை ரட்ணசிங்கம்**

அவர்கள் 11.03.2019 காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம், சாவகச்சேரி.**

(IN/9625)(11,17)

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 23.02.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் ஆறுமுகம் புவனேந்திரன்**

அவர்களின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் நாளை (14.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்.**
**077 833 4225**
**மனைவி, பிள்ளைகள்.**

(CS 23947) (14.17)

## மரணஅறிவித்தல்

**திருமதி இரத்தினசிங்கம் அன்னப்பிள்ளை**

*(ஓய்வு பெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை)*



மண்ணில் 06.07.1941 விண்ணில் 11.03.2019

கரவெட்டி கிழக்கு கரவெட்டி யைப் பிறப்பிடமாகவும் வெள் ளாம் போக்கட்டி, கொடிகாமம் மற்றும் செங்குந்தா வீதி, திரு நெல்வேலி கிழக்கு , கல்வி யங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசிங் கம் அன்னப்பிள்ளை 11.03.2019 திங்கட்கிழமை இயற்கை எய்தி னார்.

அன்னார் காலஞ்சென்ற சம் பந்தர் இரத்தினசிங்கம் (சிறாப் பர்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம் பரப்பிள்ளை லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் அகிலன் (நூலக உத்தியோகத் தர். யாழ். பல்கலைக்கழகம்), அன்பரசி (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் தென்மராட்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜீவாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு), அருட் செல்வன் (நுண்ணாய்வு உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், கிளி நொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அக் ஷயாவின் அன்புப் பேரத் தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2019) வியாழக் கிழமை காலை 8.00 மணிக்கு கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவ ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**அகிலன் 076 9376444/ அன்பரசி 077 8736719**

## வடமாகாண இளைஞர் யுவதிகளுக்கான கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான மாபெரும் இலவச கருத்தரங்கு

இலகுவாக தொழில் பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில்துறைசார் கற்கைநெறிகள்.

- ஹோட்டல் முகாமைத்துவம்
- ஊடக அறிவிப்புத்துறை
- கணினிசார் கணக்கியல்
- ஆங்கிலம்
- சிங்களம்

போன்ற தொழில்துறைசார் கற்கைநெறிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இக்கற்கைநெறிகளினூடாக இலங்கை மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் பற்றியுமான விரிவான மாபெரும் கருத்தரங்கு.

**கருத்தரங்கானது முற்றிலும் இலவசம்...**

காலம் :- 16.03.2019 (சனிக்கிழமை)
நேரம் :- காலை 9.00 மணிமுதல்
இடம் :- கலைத்தூது கலையகம்
இல.286, பிரதான வீதி, மடத்தடிச்சந்தி, யாழ்ப்பாணம். (எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக)



அனுமதிகள் முற்றிலும் இலவசம்

இலவச பதிவுகளுக்கு - ஹில் கல்லூரி.
070 550 6560, 077 675 7448

## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?
{இரகசியம் பேணப்படும்}

- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்
**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.
0778 432 602 / 075 302 4239
என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 04 . 1942



மறைவு 22 . 02 . 2018

## சின்னத்தம்பி இராசம்மா

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
ஈடேற்றிய எம்மிதயத் தெய்வமே!
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாது எம் துயரம்.

*இன்று (13.03.2019) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

குடும்பத்தினர்.
மீசாலை வடக்கு.
கொடிகாமம்.
077 844 7799, 077 563 5734

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ பெரியவிளான் றோ.க.த.க பாடசாலை
செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் - 2018



Congratulations


தேசிய மட்ட **செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள் 2018** இல் பங்குபற்றி **வெண்கலச் சான்றிதழ்** பெற்ற அணிகளில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்ட எமது பாடசாலை **தரம் 3 கலப்பு அணியினரையும் இவ் அணிப் பொறுப்பாசிரியர் திருமதி ஜ.றமேஸ்** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்

## மரண அறிவித்தல்

## சம்பந்தர் நடராசா



பிறப்பு 05.12.1933
இறப்பு 12.03.2019

தெல்லிப்பழையைப்பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தர் நடராசா நேற்று (12.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றகந்தையாவின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் பாசமிகு கணவரும் சசிதரன் (துபாலகம் - தெல்லிப்பளை) காலஞ்சென்ற சுசிதரன், பாலதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியரூபியின் அன்பு மாமனாரும் சனா, சங்கீதா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2019) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சசி (மகன்)
076 627 5466

## மரணஅறிவித்தல்



## செல்வத்திரவியம் நாகேஸ்வரி

நாகர் கோயில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்திரவியம் நாகேஸ்வரி நேற்று (12.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செல்வத்திரவியத்தின் அன்பு மனைவியும் இராசமலர்(காந்தி) காலஞ்சென்ற முருகேசு(சிவபாதம்) மற்றும் அண்ணன் கணேசபிள்ளையின் அன்புச் சகோதரியும் அகிலனின் பாசமிகு தாயும் உஷாளினியின் அன்பு மாமியாரும் ஆயூஷனின் அன்புப் பேர்த்தியும் மீராவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2019) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாகர்கோயில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகர் கோயில் கிழக்கு,
நாகர் கோயில்.
தகவல்:
மகன் -அகிலன்

## 11 பேர் கொலை....

டைப் பிரிவு தமது கட்டுப்பாட்டிலேயே இருந்தது என்று முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட ஒப்புக் கொண்டுள்ளார். நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவர் வழங்கிய வாக்குமூலத்தின் போதே அவர் இதை ஒப்புக் கொண்டார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் 14 ஆவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட தலைமறைவாகியிருந்தார். பின்னர் உயர் நீதிமன்றத்தின் மூலம், கைது செய்யப்படுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பெற்றுக் கொண்ட அவர், உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சென்று வாக்குமூலம் வழங்கினார். அவரிடம் மாலை 5 மணிவரை சுமார் 8 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டது.

அதேவேளை, பாதுகாப்பு அதிகாரி ஒருவருடன் குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்தில் முன்னிலையான அட்மிரல் வசந்த கரன்னகொடவை மீண்டும் இன்று காலை விசாரணைக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## பேரணிக்கு...

வடக்கு மாகாணம் முழுவதும் பயணிக்கும், என்றும், சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை அடைந்து பேரணியில் பங்கேற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்காது மக்களுக்கான நீதியைப்பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியே எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சமூகத்தினரால் பேரணி நடத்தப்படவுள்ளது. இந்தப் பேரணி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகி முற்றவெளி வரை செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-37)

## எரிபொருள்...


என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றரின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 137 ரூபாவாகும். ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றரின் விலை 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் , அதன் புதிய விலை 157 ரூபாவாகும். ஓட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஓட்டோ டீசலின் புதிய விலை 104 ரூபாவாகும்.

சூப்பர் டீசல் லீற்றரின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 134 ரூபா என நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# காலஅவகாசம் வழங்குவதால் நீதி கிடைத்து விடுமா?

இந்துமதி



இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவது தொடர்பாகக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகத் தென்படவில்லை. காலஅவகாசம் வழங்கினால்தான் பன்னாட்டுச் சமூகத்தின் இலங்கை மீதான கண்காணிப்பு நீடித்திருக்குமெனக் கூறப்படுவதை யும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

போர் ஓய்ந்து பத்து ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலிருந்து இலங்கை நழுவிவருவதையே காண முடிகின்றது. ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் கால அவகாசம் வழங்குவது வாடிக்கையாகவே மாறிவிட்டது. நடப்புக் கூட்டத் தொடரிலும் பிரிட்டன் தலைமையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தில் இலங்கைக்கு இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது. கூட்டமைப்புக்குள் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கப்படுவது தொடர்பாக முரண்பாடு தோன்றியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

### போர்க்குற்றம் என்பது ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டதொன்று

இறுதிப் போரின்போது போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றமை தொடர்பாக உரிய ஆதாரங்களுடன் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ளது. இவை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர்களில் ஆராயப்பட்டு இலங்கைக்கு எதிரான தீர்மானங்களும் நிறைவேற்றி வைக்கப்பட்டன. ஆனால் இலங்கை இது தொடர்பாக அலட்டிக் கொள்ளவேயில்லை. அரச தலைவர் உள்ளிட்ட தென்பகுதி அரசியல்வாதிகள் படையினர் மீதான எந்த விசாரணையும் இடம்பெறுவதற்கு இடமளிக்கப்போவதில்லையெனக் கூறி வந்தனர். பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக இவர்கள் சிறிதும் அக்கறை காட்டவில்லை. முன்னாள் அரச தலைவரான சந்திரிகா அம்மையார் முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதை உறுதி செய்தனர். போர்க்குற்றங்கள் இடம்பெற்றதற்கு இதைவிட வேறு ஆதாரங்கள் தேவையில்லை. சரத்பொன்சேகாவை அழைத்து விசாரணை களை மேற்கொண்டால் குற்றச் செயல்களின் பின்னணியில் இருந்தவர்கள் தொடர்பான விவரங்க ளைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

### ஆளுநரின் நியமனம் சதிச் செயலா?

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் அரசின் சார்பில் மூவரைக் கொண்ட குழுவொன்று செல்லவுள்ளதாக அரச தலைவர் கூறி யுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. தமிழரான வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க ஆகிய மூவருமே அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். வடக்கு ஆளுநரைத் தேர்ந்தெடுத்தமைக்கு உள்நோக்கம் இருப்பதாகவே தெரிகின்றது. அவரொரு தமிழர் என்பதும் போர் இடம்பெற்ற வடக்கின் ஆளுநராகப் பதவி வகிக்கிறார் என்பதும் குறிப்பி டத்தக்க அம்சங்களாகும். வெளிநாட்டு அழுத்தமில்லாத சூழலில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென ஜெனிவாவில் வைத்து இவரது வாயால் சொல்ல வைப்பதே அரச தலைவரின் உள்நோக்கமாகும்.

ஆனால் ஜெனிவா அமர்வில் போர்க் குற்றங்கள் தொடர்பாகவோ அல்லது தமிழர்கள் எதிர்கொண்ட பேரழிவு தொடர்பாகவே பேசுவதை அரச தலைவர் அறவே விரும்பவில்லை யென்பது தெளிவாகத் தெரிகின்றது. 'எமது பிரச்சினைகளை நாமே பார்த்துக் கொள்ளுகின்றோம். பழையவற்றை எவருமே கிளற வேண்டாம்' என்று அவர் கூறியதன் மூலமாக அவரது நோக்கம் தெளிவாகவே தெரிகின்றது. போர் இடம்பெற்றுபத்து ஆண்டுகள்முடிவடைந்தால் பழைய வடுக்களைக் கிளறுவதன் மூலமாக எவ்வித பயனுமில்லையெனக் கூறுகின்ற அரச தலைவர் இன்னமும் இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டால் சகலதையும் மறக்குமாறு அறிவுரை கூறுவாரென எதிர்பார்க்க முடியும்.

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்பின ருக்கு முக்கியமான கடமைகள் உள்ளன. புதிய அரசமைப்புத் தொடர்பாக அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்து போன நிலையில் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் செயற்படவேண்டிய தேவையும் தற்போது எழுந்துள்ளது. ஜெனிவாவில் இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவதன் பின்னணியில் கூட்டமைப்பு இருப்பதாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ள நிலையில் அதை உறுதி செய்வது போன்று சம்பந்தன் கருத்து வெளியிட்டிருக்கிறார். ஐ.நா. தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில் வீசாமல் இருக்க வேண்டுமானால் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கவேண்டுமென அவர் கூறியமை சரியாகத் தெரியவில்லை. கால அவகாசம் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருந்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவே மாட்டாது. இலங்கை அரசு ஐ.நா. மட்டுமல்லாது பன்னாட்டுச் சமூகத்தையும் ஏமாற்றுவதற்கு முயற்சி செய்வதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அரசின் கபட நோக்கத்தைப் புரிந்துகொண்டு அதை முறியடிப்பதற்கான முயற்சிகளே கூட்டமைப்புக்கு இன்று தேவைப்படுகின்றது.

> போர் ஓய்ந்து பத்து ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலிருந்து இலங்கை நழுவி வருவதையே காண முடிகின்றது. ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் கால அவகாசம் வழங்குவது வாடிக்கையாகவே மாறிவிட்டது. நடப்புக் கூட்டத் தொடரிலும் பிரிட்டன் தலைமையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தில் இலங்கைக்கு இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரிய வருகின்றது.
> கூட்டமைப்புக்குள் இலங்கைக் குக் கால அவகாசம் வழங்கப்படுவது தொடர்பாக முரண்பாடு தோன்றியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

## ஆசிரியருக்கான கடிதம்

# பருவச்சீட்டுப் பெறப்படும் பாடு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருவச் சீட்டு வழங்கும் அலுவலகம் யாழ்ப்பாண நகரின் மத்தியில் இருக்கின்றது. சின்னக் கட்டடத்தில் ஆறு தொடக்கம் ஏழு பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். வார நாள்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், அரச ஊழியர்கள் பருவச் சீட்டுப் பெற்றுக் கொள்ள பெருமளவில் வருகின்றனர்.

ஒவ்வொரு தரப்பினருக்கும் பருவச்சீட்டு வழங்க ஒவ்வொரு பணியாளர்கள் இருக்கின்றனர். மாணவர்களுக்கு பருவச் சீட்டு வழங்கும் பணியாளர்கள் நடந்து கொள்ளும் விதம் மனதுக்கு வேதனையாக இருக்கின்றது. மாணவர்களை ஒருமையில் அழைப்பதும், காக்க வைப்பதும், பெயர்ப் பட்டியலைத் தேட ஆரம்பிக்கும் முன்பே, 'அதுகூடப் பார்க்கத் தெரியாம கம்பஸ் போய் நீ என்ன கிளிக்கிறாய்' என்று கேட்பதும், மனதை நெருடுகின்றது.

மாணவர்களுடன் கண்ணியத்துடன் அவர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு. வேலைச் சுமைக்கு மத்தியில் பணியாற்றும் அவர்கள், மாணவர்களின் மனம் கோணாதவாறு எதிர்காலத்தில் நடக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்ட மாணவி**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை தேர்தல்களும் ஐ.நா. தீர்மானங்களும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் முதன் முதலில் பரபரப்பாகப் பேசப்படத் தொடங்கியது 2009ஆம் ஆண்டில். போர் முடிந்திருந்த கையோடு இலங்கையில் நடந்து முடிந்திருந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கொழும்பைக் கண்டிக்கும் வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு மனித உரிமை அமைப்புகள் முயற்சித்தன. ஆனால், அந்த முயற்சி தோல்வியடைந்தது. கண்டனத் தீர்மானத்துக்குப் பதிலாக, பயங்கரவாதம் என்று இலங்கை அரசு கூறி தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை வெற்றிகரமாக ஒடுக்கியமைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமே நிறைவேறியது, பிள்ளையார் பிடிக்கப் போக அது குரங்கான கதையாக.

அதன் பின்னர் ஜெனிவாவில் கொழும்பை இலக்கு வைப்பது பொலிவிழந்திருந்தது. ஆனால், கொழும்பின் சீனச்சார்பு நிலை உச்சம் பெற்றதை 2012ஆம் ஆண்டில் மீண்டும் கொழும்பு மீதான நெருக்கடிகள் ஜெனிவாவில் தீவிரம் பெறத் தொடங்கின. அதேயாண்டில் இலங்கை தொடர்பில் முதற்றடவையாகத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் 2013ஆம் ஆண்டு ஜெனிவாவில் மீண்டும் ஒரு தீர்மானம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் தமிழர்களிடம் பெரும் எதிர்பார்ப்பையும் ஆழமான நம்பிக்கைகளையும் ஏற்படுத்தியது என்பதை மறுப்பதற்கில்லை.

2013ஆம் ஆண்டு இலங்கை தொடர்பான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டபோது அது மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு எதிராகத் தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கூடப் பார்க்கப்பட்டது என்பதையும் மறுப்பதற்கில்லை. அந்தத் தீர்மானத்தால் நடக்கப்போவது எதுவுமில்லை என்பதை அரசியல் அவதானிகள் பலரும் ஊடகவியலாளர்கள் சிலரும் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்தபோதும்கூட, தமிழர்கள் சார்பில் சாதகமாக நிகழ்ந்த அரசியல் நிகழ்வு என்று அணுகப்பட்டமையை மறுத்துவிட முடியாது.

அது வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலமாகவும் இருந்தது.

ஆயுதப் போராட்டத் தோல்வியால் நலிந்துபோய்க் கிடந்த தமிழ் இனத்துக்கு 2013 ஐ.நா. தீர்மானம் புதிய நம்பிக்கையையும் உத்தேவகத்தையும் கொடுத்தது. இலங்கையில் இறுதிப் போரின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை நடத்துமாறு அந்தத் தீர்மானம் கேட்டது. அத்தகைய ஒரு விசாரணையை இலங்கை அரசு நடத்தவில்லை என்பதனால் அடுத்த ஆண்டே அதாவது 2014ஆம் ஆண்டே இலங்கையில் நடந்த குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையிடுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை மற்றொரு தீர்மானம் கேட்டுக்கொண்டது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் வரையில் இந்த உத்வேகம் தக்க வைக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் குறித்தே இப்போது அனைவரும் பேசி வருகின்றனர். இந்தத் தீர்மானத்துக்கு கொழும்பு அரசும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதற்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மூன்றிற்கும் ராஜபக்ச ஆட்சி முழு எதிர்ப்பைக் காட்டி வந்தது. அதனால் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. 2015இல் ஆட்சி மாறியதும் தீர்மானத்தை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்த மைத்திரி– ரணில் ஆட்சியும் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை.

இரண்டுக்கும் பெரிதாக வித்தியாசங்கள் ஏதுமில்லை. கொழும்பு அரசு தானே ஏற்றுக்கொண்டு இன்னும் ஒரு படி மேலேபோய் தானும் இணைந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் பெரும் பகுதியை நிறைவேற்றாமலேயே 4 வருடங்களைக் கடத்திவிட்டது. ஆனாலும் அதற்கு எதிராகப் பன்னாட்டு விசாரணை நடத்துவதற்கான எத்தனங்கள், நகர்வுகள் மனித உரிமைகள் சபையில் இல்லை.

இந்தப் பின்னணியிலேயே இப்போது மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விவகாரம் பரபரப்பாக்கப்படுகின்றது. குறிப்பாகத் தமிழ்க் கட்சிகள் மிகப் பரபரப்பாகக் கொழும்பு மீதான கண்காணிப்பு இன்னும் நீடிக்கப்பட வேண்டும் என்கின்றன அல்லது கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என்று கடிதம் எழுதுகின்றன. ஜெனிவா மீண்டும் தமிழர்களிடம் பெரும் பரபரப்பை உருவாக்குகின்றது. தெற்கிலும் அதேபோன்று ஒவ்வொரு கட்சிகள் ஒவ்வொன்றைக் கூறுகின்றன. எல்லாத் தரப்புக்களும் ஜெனிவாவுக்குத் தமது பிரதிநிதிகளை இம்முறை அனுப்பவுள்ளன என்றும் செய்திகள் வருகின்றன.

நன்றாகக் கவனியுங்கள்! 2013 மாகாண சபைத் தேர்தல் காலம், இப்போதும் மாகாண மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களும் அரச தலைவர் தேர்தலும்கூட வரப்போகின்ற காலம்.

# ஐ.நாவைச் சீண்டி விடுமா அரச தலைவரின் சவால்?

சேரலாதன்

ஐ.நாவுக்கே சவால் விடும் வகையில் அரச தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார். இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இனிமேல் தீர்மானம் ஏதாவது நிறைவேற்றப்பட்டால் அதை ஏற்பதற்குத் தாம் தயாரில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்களைக் கேட்கும்போது இலங்கை ஐ.நாவின் ஓர் உறுப்பு நாடா என்ற சந்தேகம்தான் மனதில் எழுகின்றது.

அரச தலைவர் தெரிவித்த இன்னுமொரு கருத்தும் சிந்தனையைத் தூண்டுகின்றது. ஏற்கனவே இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கலாவதியாகிவிட்ட நிலையில் அவை தொடர்பாக இனியும் பேசிக்கொண்டிருப்பது வீண் வேலை என்று குறிப்பிட்டுள்ளார். ஐ.நாவைக் கிள்ளுக் கீரையாக நினைக்கின்ற அரச தலைவரின் மனப்பான்மை இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது.

வல்லரசு நாடுகளும் வளர்ந்த நாடுகளும் ஐ.நாவுக்கு மதிப்பளிக்காத நிலையில் இலங்கை போன்ற அபிவிருத்தி காணாத சிறிய நாடுகளும் அந்த வழியில் செல்வதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பான் கீ மூன் ஐ.நா. பொதுச் செயலராக இருந்தபோது அவர் இலங்கைக்கு வருகை தந்து போரின் பின்னரான நிலமைகளை ஆய்வு செய்தார். அரச தலைவர் பதவியில் அமர்ந்திருந்த மகிந்த ராஜபக்ச அவருக்குச் சில உறுதிமொழிகளையும் வழங்கியிருந்தார். அவற்றில் எவையுமே நிறை வேற்றப்பட வில்லை.



இறுதிப் போர் இடம்பெற்றபோது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டதுடன் போர்க் குற்றங்களும், மனிதஉரிமை மீறல்களும் தாராளமாகவே இடம்பெற்றுள்ளன. ஆனால் இவற்றை மூடி மறைக்கின்ற செயற்பாடுகளில் இலங்கை அரசு மட்டுமல்லாது பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பலரும் ஈடுபட்டுள்ளனர். அரச தலைவர் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ போர்க் குற்றங்கள் தொடர்பாகத் தம்முடன் எவருமே கலந்துரையாட முடியாதென அரச தலைவர் தெரிவித்தமை அவர் இலங்கையின் அரச தலைவர் பதவியை இன்னமும் வகிக்கிறாரா என்ற சந்தேகத்தைப் பலரிடமும் எழுப்பியிருக்கக்கூடும். ஒரு நாட்டில் நடந்து முடிந்த விடயம் தொடர்பாக அந்த நாட்டின் அரச தலைவருடன் பேசாது வேறு எவருடன் பேச முடியும்?

இரண்டாவது உலகப் போர் முடிந்த கையோடு இன்னுமொரு உலகப்போர் இந்தவுலகில் இடம் பெறக்கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் அமைக்கப்பட்டது ஐக்கிய நாடுகள் சபை. இருநூறுக்கும் மேற்பட்ட நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. மனித உரிமைகள் சபை ஐ.நாவின் மிகவும் முக்கியமானதொரு அமைப்பாகும். மனித உரிமைகள் ஆணையாளர் இதற்குப் பொறுப்பாகவுள்ளார்.

இறுதிப் போர் இடம்பெற்றபோது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டதுடன் போர்க்குற்றங்களும், மனிதஉரிமை மீறல்களும் தாராளமாகவே இடம்பெற்றுள்ளன. ஆனால் இவற்றை மூடி மறைக்கின்ற செயற்பாடுகளில் இலங்கை அரசு மட்டுமல்லாது பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பலரும் ஈடுபட்டுள்ளனர். அரச தலைவர் இதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஐ.நாவின் பலவீனத்தை அவர் நன்றாகவே பயன்படுத்துகிறார். இல்லாவிட்டால் ஐ.நா.தொடர்பாக இறுமாப்புடன் அவர் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை மெத்தனமாகவே நடந்துள்ளது. இலங்கைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரான மிச்லே பச்செலெட் அம்மையார் அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளார். இதனடிப்படையில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இந்த நிலையில்தான் இலங்கையின் அரச தலைவர் ஐ.நாவுக்குச் சவால் விடுத்துள்ளார்.

ஐ.நா. இனியாவது எந்தவொரு நாட்டின் விவகாரங்களிலும் உறுதியான தீர்மானத்தை மேற்கொள்வதுடன் உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் முன்வர வேண்டும். பெரிய நாடுகளின் கைப்பொம்மையாக இருப்பதால் அது அமைக்கப்பட்டதன் நோக்கமே திசை மாறிப்போய் விட்டது. தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதும் காலத்துக்குக் காலம் கால அவகாசத்தை வழங்குவதும் மட்டுமே ஐ.நா. அமைப்புக்களின் பணியாக இருக்கக்கூடாது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுவதிலும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட வேண்டும். இதில் தவறு ஏற்பட்டதன் காரணமாகவே இலங்கையின் அரச தலைவர் சவால் விடுமளவுக்கு நிலைமை எல்லை மீறிச் சென்று விட்டது. அரச தலைவர் என்ற வகையில் படையினரால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு மைத்திரிபால சிறிசேன பொறுப்புக் கூறவேண்டும். அதிலிருந்து மைத்திரிபால நழுவ முடியாது. ஐ.நாவும் அவரை நழுவ அனுமதிக்கக் கூடாது.



அமெரிக்காவின் தலையீட்டாலும், தடைகளாலும் வெனிசுலாவின் அரசியலும் பொருளாதாரமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. வெனிசுலா மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இதனால் அங்குள்ள வர்த்தக நிலையங்களைச் சூறையாடுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றில் அந்த மக்களை அந்த நாட்டின் அதிபர் மதுரோ தலைமையிலான படைகள் தண்டிக்கும் காட்சி இது.

# சபரிமலை விவகாரத்தை பரப்புரைக்குப் பயன்படுத்தாதீர்

## அரசியல் கட்சிகளுக்கு எச்சரிக்கை

திருவனந்தபுரம், மார்ச்.13

இந்திய நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டிய பரப்புரைகளில் அரசியல் கட்சிகள் சபரிமலை விவகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று இந்தியத் தேர்தல் ஆணையகம் எச்சரித்தது.



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கேரளாவில் தேர்தல் பரப்புரையில் சில அரசியல் கட்சிகள் சபரிமலை விவகாரத்தைக் கையில் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் மத உணர்வு சம்பந்தப்பட்ட இந்த விடயத்தைத் தேர்தலில் பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையகம் எச்சரித்தது. இதுகுறித்துக் கேரள மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி டீகா ராம் மீனா செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துரைத்த போது "சபரிமலை விவகாரத்தை மக்களவைத் தேர்தல் பரப்புரைகளின்போது பயன்படுத்தக்கூடாது. இது தேர்தல் நடத்தை விதிமீறல்களுக்கு எதிரானது. பரப்புரையில் சபரிமலைவிவகாரத்தைப் பேசி மத உணர்வுகளைத் தூண்டி விட்டால்கடும்நடவடிக்கை எடுக்கப்படும்" எனக் கூறினார்.

**பின்னணி**

அனைத்து வயதுப்பெண்களும் சபரிமலைக்குச் சொல்லலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து கடந்த 3மாத காலமாகக் கேரள மாநிலம் முழுவதும் இந்து அமைப்புகள், பா.ஜ.கா வினர் போராட்டம் நடத்தினர். பிந்து, கனக துர்கா ஆகிய இரண்டு பெண்கள் சபரிமலைக்குப் பொலிஸ் பாதுகாப்புடன் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்தனர். இந்த விடயம் பரபரப்பை ஏற்படுத்தியது. பா.ஜ.க, காங்கிரஸ் கட்சிகள் போராட்டம் நடத்தின. கேரள அரசைக் கண்டித்து நடந்த போராட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. சபரிமலையில் மண்டல பூஜை மற்றும் மகர விளக்கு தரிசன காலம் வரையிலும் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

# வன்புணர்வுக் கொடூரம் பரபரப்புக் காணொலி

பொள்ளாச்சி, மார்ச்.13

இந்தியாவின் பொள்ளாச்சியைச் சேர்ந்த மாணவிகளை இளைஞர் கூட்டம் ஒன்று வன்புணர்வுக்குட்படுத்தியிருக்கின்றது என்பதான காணொலி வெளியாகிப் பொள்ளாச்சியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இளம் பெண்களை முகநூல் வாயிலாகவும், ஏனைய சமூக வலைத்தளங்கள், அலைபேசிகள் வாயிலாகவும் தொடர்பு கொண்டு காதலிப்பதாகக் கூறி அழைத்துச் சென்று இந்த வன்புணர்வுகள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அ.தி.மு.கா சார்ந்தவர்களே குற்றவாளிகள் என்றும் செய்தி பரவியுள்ளது. இதற்கு தி.மு.க. தலைவர் ஸ்ராலின், பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தர ராஜன், திரைப்பட நடிகர்கள் எனப்பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவிருக்கின்ற நிலையில், அதில் வெல்வதற்காக அரசியல் கட்சிகள் எந்தவொரு கட்டத்துக்கும் செல்லக்கூடியவை என்றுஇந்தச் சம்பவம் பற்றிக் கருத்துரைப்பவர்களும் உள்ளனர்.

# கிம்மை மீண்டும் சந்திக்க ட்ரம்ப் தயார்

வோஷிங்டன், மார்ச்.13



வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தயாராக இருப்பதாக அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் தெரிவித்தார். சிங்கப்பூரில் கடந்த ஜீன் மாதமும், கடந்த மாத இறுதியில் வியட்நாமில் 2ஆவது முறையாகவும் கிம்மும் ட்ரம்பும் சந்தித்துப் பேசினர். ஆனால் எந்தவித உடன்பாடும் எட்டப்படாமல் இந்தப் பேச்சு முடிவுக்கு வந்தது.

அமெரிக்க - தென் கொரியா இராணுவத்தினர் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர். இதனால் அதிருப்தி அடைந்த வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்த முற்படுவதாகத் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், அணு ஆயுதப் பரவலைத் தடுக்கக் கிம்முடன் மீண்டும் பேச்சுக்களை நடத்த ட்ரம்ப் தயாராக இருப்பதாக ஜோன் போல்டன் தெரிவித்தார்.



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் சஞ்சலம் கொள்வீர்கள். கவனமுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**இடபம்:** மனதில் வெகுநாள் இருந்த குழப்பம் சரியாகும். வாழ்வில் முன்னேற்றம் பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**மிதுனம்:** சுயமான செயல் மட்டுமே ஓரளவு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும்.

**கடகம்:** உண்மை மற்றும் உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்:** நண்பரின் ஆதரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும். பலரும் வியக்கும் வகையில் தொழிலில் வளர்ச்சி உருவாகும். உபரி வருமானம் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** முக்கியமான பணியை பிறரிடம் ஒப்படைக்க கூடாது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். குறைந்த அளவில் பணம் கிடைக்கும். அதிக பயன்தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

**துலாம்:** அக்கம் பக்கத்தவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**விருச்சிகம்:** இனிய எண்ணங்களுடன் பணிகளை துவங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் பலகாலம் இருந்த இடையூறு விலகும். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**தனுசு:** மனதில் இறையருள் மீதான நம்பிக்கை வளரும். தொழிலில் உற்பத்தி விற்பனை சிறந்து புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். குடும்ப உறுப்பினர் உதவிகரமாக செயல்படுவர். சக தொழில் சார்ந்தவரிடம் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம்.

**கும்பம்:** நண்பரின் ஆலோசனை மனதில் புதிய நம்பிக்கையைத் தரும். தொழில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** செயல்களில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். உபரி பணவரவில் நிலுவை கடன் செலுத்துவீர்கள்.

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி தேசிய பாடசாலையாகும்

## விரைவில் நடக்கும் என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி விரைவில் தேசிய பாடசாலையாகத் தரம் உயரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அந்தப் பாடசாலையில் 70 லட்சம் ரூபா செலவில் அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்னும் வேலைத் தீட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலைக்கான நவீன கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அதைத் திறந்து வைத்தார்.

அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சரவணபவன் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் கல்வி, விளையாட்டு மற்றும் சகல ஈடுபாடுகளிலும் தனித்துவமான பாடசாலையாக ஸ்கந்தவரோதயக் கல்லூரி மிளிர்வதால் விரைவில் தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்த முழு நடவடிக்கையும் முன்னெடுப்பேன்.

கல்லூரி நல்லதொரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

வளமுள்ள ஆசிரியர்களைக் கொண்டுள்ள தனித்துவமான இந்தப் பாடசாலையை மாணவ சமூகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பல்வேறு சமூக சீர்கேடுகளுக்கு எமது சமூகம் அகப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்வி வளர்ச்சி, விளையாட்டு மற்றும் சமூக செயற்பாடுகளில் தேசிய மட்டத்துக்குச் செல்லக் கூடியதாக தங்களை அர்ப்பணித்துச் செயலாற்ற மாணவர்கள் முன்வர வேண்டும் - என்றார். இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஜூலை மாதம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 125ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் சிறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. கடந்த ஐந்து மாதங்களாக தொழில்நுட்பப் பீட கட்டடம் உட்கட்டுமான நிகழ்வு தடைப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அதிகாரி பணிகளைத் துரிதமாக முன்னெடுத்து அபிவிருத்திக்கும் மாணவ சமூகத்துக்கும் உதவ வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வி, சமூக மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு நிதி வழங்கி உதவிவரும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுக்குக் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் கிராம மக்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். நிகழ்வில் பிரதி அதிபர் செல்வி. ஜெயகவிதா நன்றி தெரிவித்து உரையாற்றினார். (த-50)

## பொலிஸ் காவலரண்கள் அமைக்க நடவடிக்கை

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் அராலிச் சந்தி, வங்களாவடி ஆகிய பகுதிகளில் பொலிஸ் காவலரண்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதியளித்தார்.

வேலணைப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அராலி சந்தி, வங்களாவடி ஆகிய பகுதிகளில் பொலிஸ் காவலரண்கள் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபை தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி மற்றும் உறுப்பினர் பிரகலாதன் ஆகியோர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டது.

சந்திப்பு தொடர்பில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

வேலணைப் பிரதேசத்தில் உள்ள பல வளங்கள் சட்டவிரோதமாக சூறையாடப்படுகின்றன. இதனால், நிலையான அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கமுடியாத நிலையில் இருக்கின்றோம். சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு இரு மாதங்களுக்கு முன்னர் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையிலும் இது வரை பொலிஸார் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை.

சட்டவிரோதமான முறையில் மணல் கடத்தல்கள், கற்றாழை கடத்தல், இரும்பு கடத்தல்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு பொலிஸாரின் உதவி தேவைப்படுகிறது. பொலிஸ் காவலரண்களை அமைக்க நடவடிக்க்கை எடுக்குமாறு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளோம்.

எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தான் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை முன்னெடுக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார் என்று தெரிவித்தனர். (ஐ-106)

## சேவை நலன் பாராட்டு நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 13

மீசாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவலகர் செ.மதியழகன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் திருமதி ஜெகானந்தன் சுபவதனி ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

மீசாலை கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் தா.நிர்மலமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினராக போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், பிரிவுப் பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் திருமதி சிவசுதன் பத்மாஜினி, சமுர்த்தி அலுவலகர் ந.கிருபாகரன் கிராம அலுவலர் நா.கௌரிதரன், மந்துவில் வடக்கு மேற்கு கிராம அலுவலர் ஐ.கானமூர்த்தி, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159,9)





## பாடல் ரசனை நிகழ்வுகள்

கொடிகாமம், மார்ச் 13

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிருமாத விளக்கு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக பாடல் ரசனை நிகழ்வுகள் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் மறவன்புலவு கிராம அலுவலர் தனபாலசிங்கம், தென்மராட்சி பிரதேச செயலக கலாசார திணைக்கள அலுவலகர்கள், கிராம மக்கள் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

## கல்லுண்டாய் வெளியில்

## கட்டாக்காலி நாய்களால் போக்குவரத்துப் பாதிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 13

கல்லுண்டாய் வெளியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களின் தொல்லையால் பொதுமக்கள் வீதியால் நடமாட முடியாமல் திண்டாடுகிறார்கள்.

ஒருவார காலத்துக்கு முன்னரும் 3 வயதுச் சிறுமி மற்றும் வயோதிபரொருவர் உட்பட நாய்க்கடிக்கு இலக்கான ஐவருக்கு விசர் நாய்க்கடிக்கான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற நல்லூர்த் திருவிழாவின்போது அடியார்களின் பாதுகாப்புக் கருதி ஆலயச் சுற்றாடலில் அலைந்து திரிந்த கட்டாக்காலி நாய்களைப் பிடித்த யாழ்ப்பாண மாநகர சபையினர் கல்லுண்டாய் வெளியில் திண்மக் கழிவு கொட்டப்படும் வளாகத்தில் விட்டிருந்தனர்.

இந்த நாய்கள் வீதியால் செல்லும் பொதுமக்களைத் துரத்துவதுடன் அயல் கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள கால்நடைகளையும் கோழிகளையும் கடித்து வந்தன.

அந்தப் பகுதி மக்கள் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையையடுத்து இதற்கு நடவடிக்கை எடுக்க முன்வந்த பிரதேச சபை நாய்களைப் பிடித்துச் செல்லுமாறு மாநகர சபையினருக்கு அறிவித்திருந்ததுடன் தீர்மானத்தையும் நிறைவேற்றியிருந்தது.

கல்லுண்டாய் வெளியில் யாழ்ப்பாண மாநகர சபையால் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் மற்றும் நாய்களின் தொல்லைகள் குறித்து இந்தப் பகுதியைச் சேர்ந்த இ.மனோகரனால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த நீதிவான் கடந்த இரு மாதங்களுக்கு முன் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் வளாகத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன் நாய்களால் ஏற்படும் பாதிப்பு குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபை பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறிவித்திருந்தார். (ஐ-115)

## முதற் தடவையாக

## வெண்கலத்தை வென்றது கரம்பைக்குறிச்சி அ. த.க

கொடிகாமம், மார்ச் 13

தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டியில் வரலாற்றில் முதன்முறையாகக் கரம்பைக் குறிச்சி அ. த.க பாடசாலை மாணவர்கள் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டி கண்டி போகம்பரை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தப் பாடசாலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி நூற்றாண்டைக் கொண்டாடவுள்ளது. இந்த நிலையில் இந்தச் சாதனை நிலை நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-159)



## சாவகச்சேரி இந்துவுக்கு வெண்கலப்பதக்கம்



கொடிகாமம், மார்ச் 13

தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் வெண்கலப்பதக்கத்தை பெற்றுக் கொண்டனர். இந்தப் போட்டி கண்டி போகம்பரை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாணவர்கள் கடந்த வருடமும் இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தேசிய மட்டத்தில் வெண்கலப்பதக்கத்தை பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## மகளிர் தினத்தை முன்னிட்டு மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 13

பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வோதயம் மற்றும் வேள்ட் விசன் நிறுவனத்தால் 'உறுதியான பெண்கள் ஆரோக்கியமான வாழ்வு' என்ற தலைப்பிலான மாநாடு யாழ்ப்பாணம் திறன் முகாமைத்துவ நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு உரை ஒன்றினையும் நிகழ்த்தினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# திருநெல்வேலிச் சந்தையில் உழவர் சந்தை மிகவிரைவில்

## கழிவுமுறையை நிறுத்தவும் தீர்மானம்

*யாழ்ப்பாணம், மார்ச் 13*

*திருநெல்வேலிச் சந்தையில் கழிவு முறையைத் தடுத்தல், உழவர் சந்தையை உருவாக்கல் போன்றவற்றுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.*

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உறுப்பினர் எஸ்.சிவலோசன் தீர்மானத்தைச் சபையில் முன்மொழிந்து உரையாற்றுகையில்:

திருநெல்வேலிச் சந்தையில் உழவர் சந்தையை உருவாக்க வேண்டும். வியாபாரிகளிடம் கழிவு அறவிடப்படுகின்றது. அதை முற்றாக நிறுத்த வேண்டும். பிற மாவட்டங்கள் மற்றும் தம்புள்ளையிலிருந்து கொண்டு வரப்படும் மரக்கறிகளுக்குக் கழிவு அறவிடப்படுவதில்லை. ஆனால் உள்ளூர் வியாபாரிகள் பல கஸ்டங்களுக்கு மத்தியில் விவசாயம் செய்து உற்பத்தி பொருள்களைக் கொண்டுவந்தால் அவர்களிடம் பத்துக்கு ஒரு கிலோ என்ற அடிப்படையில் கழிவு அறவிடப்படுகின்றது. உள்ளூர் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

கமநல சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி நிலத்துக்குக் கீழ் விளையும் உற்பத்தி பொருள்களுக்கே கழிவு அறவிட வேண்டும். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்- என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபை உறுப்பினர் சி.முருகையா, சந்தைகளில் கழிவு முறையை நீக்குவதுடன் விலை வரையறையும் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு உற்பத்திக்கு ஏற்ற வருவாய் கிடைக்கும் - என்றார்.

இதனை ஆராய்ந்த சபையின் தவிசாளர், சந்தைகளில் விலை வரையறை உடனடிச் சாத்தியம் இல்லை. கழிவு முறையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். உழவர் சந்தையை எவ்வாறு அமைப்பது என்று ஆலோசனை பெறப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (து-8)

## விபத்தில் சிறுவன் உட்பட 4 பேர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 13

இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அவற்றில் பயணித்த ஏழு வயதுச் சிறுவன் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். இந்தச்சம்பவம் மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த கிருபானந்தன் ஜெகதீஸ்வரி (வயது-43) அவரது மகனான கிருபானந்தன் கோபிகன் (வயது -7) மற்றும் பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த சுரேஸ் கலிஸ்ரன் (வயது - 32) செபஸ்தியாம்பிள்ளை நிலுக்ஸன் (வயது 20) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 13

கைதடி -மானிப்பாய் வீதியில் டிப்பர் வாகனமும் முச்சக்கரவண்டியும் மோதிக் கொண்டதில் முச்சக்கர வண்டிச் சாரதி காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த நித்தியானந்தன் ஜனார்த்தனன் (வயது -42) என்ற நபரே காயமடைந்தார். (ஐ-9)



யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த இலங்கை இராணுவத்தளபதி மகேஸ்சேனநாயக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுக் காலை சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார். (ஐ– 26)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற இளம் கலைஞர்களின் கலைச்சேவையை ஊக்குவிக்கும் முகமாக 40 வயதுக்குட்பட்ட துறைசார்ந்த ஆளுமைமிக்க இளம் கலைஞர்களுக்கான ஊக்குவிப்புப்பரிசு வழங்கப்படவுள்ளது. கவிதை, சிறுகதை, நாவல், வாத்தியக்கலை , நடனம், ஓவியம், சிற்பம், கூத்து , நாடகம், இசை, ஊடகம் மற்றும் திரைப்படத்துறை, இசைநாடகம், புகைப்படம், கைவினை போன்ற துறைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும் 22 இற்கு முன்னர் விண்ணப்பிக்கமுடியும் என்று பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் தெரிவித்தார். (ஐ)

## உணவு நிலையங்களில் தொடர் சோதனை தேவை

### சுகாதாரப் பிரிவு கூறுகின்றது

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ்ப்பாணமாநகரசபைக்கு உட்பட்ட அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் தொடர்ச்சியாக சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை இருப்பதாக மாநகர சபை பொதுச் சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மக்களுக்கு உணவை விற்பனை செய்யும் நிலையங்கள் முறையான சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். அப்போது தான் உணவைப் பெற்றுக் கொள்ளும் மக்களின் சுகாதாரம் உறுதிப்படுத்தப்படும்.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட சுமார் 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் பயன்படுத்தும் இரு உணவகங்கள் மீது கடந்த வாரம் வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டது. உயர் கல்வி நிறுவனம் ஒன்றின் சிற்றுண்டிச் சாலைக்கு 20 ஆயிரம் தண்டமும், அரச மருத்துவமனையின் சிற்றுண்டிச் சாலைக்கு 35 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

இந்த இரு சிற்றுண்டிச் சாலைகளின் நிலைகள் சுகாதார முறைப்படி இன்மையால் அவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் மாநகர எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் சகல நிலையங்களும் தொடர்ச்சியாகசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டிய தேவை உள்ளது -என்றனர். (ஐ-7)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 13

அல்வாயூர்க்கவிஞர் மு.செல்லையாவின் படைப்புக்கள் உள்ளடங்கிய பெருந்தொகுதியின் வெளியீட்டுநிகழ்வு யாழ்ப்பாணம் தேவரையாளி இந்துக்கல்லூரி க.மூ.சின்னத்தம்பி கலையரங்கில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்பீடப் பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதியின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடாதிபதி கலாநிதி அ.புஸ்பநாதனும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும், இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் சி.வன்னியகுலமும் கலந்து கொண்டு வாழ்த்துரைகளை வழங்கவுள்ளன்ர்.

நூலின் அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியற்றுறைத் தலைவரும் எழுத்தாளருமான இ.இராஜேஸ்கண்ணன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபனும், மதிப்பீட்டுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் வழங்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் வி.கவிச்செல்வன் வரவேற்புரையையும் தியாக சோமஸ்கந்தராஜாக்குருக்கள் ஆசியுரையையும், க.வரதவேல் நோக்கவுரையையும், மா.செல்வதாஸ் தொடக்கவுரையையும், கலாநிதி சு.குணேஸ்வரன் பதிப்புரையையும், ஐ.உதய ரத்தினம் நன்றியுரையையும் நிகழ்த்தவுள்ளனர். கவிஞரின் பாடல்களைக் கொண்டு ஆக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ம-26)

## யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து
# வலி.தென்மேற்கிலும் கம்பங்கள் நடுகை

### சபையினர் முறையிட்டும் பொலிஸ் நடவடிக்கையில்லை

வலி.தென்மேற்கு, மார்ச் 13

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் இரு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு வீதிகளில் சிமெந்தால் செய்யப்பட்ட கம்பங்களை நட்டு வருகின்றன.

இந்தச் செயல் குறித்துப் பிரதேச சபையினர் பொலிஸில் முறைப்பாடு செய்த போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கம்பங்கள் தொடர்ந்தும் நடப்பட்டு வருகின்றன என்று சபையினர் தெரிவிக்கின்றனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தில் முதன்மை வீதிகளின் இரு பக்கங்களிலும் இரு தொலைக்காட்சி நிறுவனங்கள் கடந்த சில தினங்களாக மிக வேகமாகக் கம்பங்களை நட்டு வருகின்றன.

பிரதேசசபையின் அனுமதியின்றி இடம்பெறும் இந்தச் செயல் குறித்துப் பிரதேச சபையினர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சபையினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாண மாநகர சபை பகுதியில் இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது. இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. கம்பங்கள் நடுவதற்கு நீதிமன்று தடை விதித்தது.

அதனையும் மீறி கம்பங்கள் நடப்படுகின்றன என்று மாநகர சபையினர் தெரிவித்தனர். (து-115)



## ரவி யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புதிய கட்டட திறப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மின் வலு, எரிசக்தி மற்றும் தொழிற்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

கல்லூரியின் புதிய கட்டட திறப்பு நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-7)

## உணவகம் சுகாதாரச் சீர்கேடு: உரிமையாளருக்குத் தண்டம்

வலி.மேற்கு, மார்ச் 13

சுகாதார விதிமுறைக்கு முரணான வகையில் இயங்கி வந்த உணவக நிலைய உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் உணவகத்தை மூடுமாறும் உத்தரவிட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட குருநகர்ப் பகுதியில் இயங்கி வரும் உயர் கல்வி நிறுவனத்தின் உணவகத்துக்கு எதிராகவே தண்டம் விதிக்கப்பட்டது. கல்வி நிறுவனத்தில் சுமார் 2 ஆயிரத்து 500 ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிறுவனத்தில் இயங்கி வரும் உணவகத்தைக் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் சோதனைக்கு உட்படுத்திய யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ்குமார் உணவகத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு உரிமையாளருக்கு அறிவுறுத்தியிருந்தார். இந்த நிலையில் 10 மாதங்கள் கடந்த போதும் உணவகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யாமலிருப்பதை அவதானித்த பொதுச் சுகாதார பரிசோதகர், உணவக உரிமையாளருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா5 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் வரை உணவகத்தை மூடுமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ-115)



## சிறுவர் விழிப்புணர்வு

வவுனியா.மார்ச் 13

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை அக்குனஸ் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எஸ். ஜெபநாயகி தலைமையில் மாணவர்களுக்கான சிறுவர் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியுடன் இணைந்து சிறுவர்கள் துர்நடத்தை விழிப்புணர்வு நிகழ்வை வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் மேற்கொண்டது.

தற்போது சிறுவர்கள் எதிர்நோக்கும் போதைப்பாவனை, துர்நடத்தை தொடர்பாக பொலிஸாரால் மாணவர்களுக்கு ஒளிப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு விழிப்புணர்வு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் விளையாட்டுத்துறையில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு சான்றிதழ்கள், கேடயங்களையும் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம, வடமாகாண கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவரும், கிறிஸ்தவ மத விவகாரங்களுக்கான செயலருமான அருட்கலாநிதி எஸ். சந்திரகுமார், போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிறுவர் பெண்கள் பொறுப்பதிகாரி, பொலிஸார், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (க)

துப்புரவு செய்யப்பட்ட

# 200 ஏக்கர் நிலம் பற்றி அறிக்கையிடவும்

### மாவட்டச் செயலர் பணிப்பு

*வவுனியா, மார்ச் 13*

*வவுனியா வடக்கு ஊற்றுப்புலம் பகுதியில் அத்துமீறிய குடியேற்றத்துக்காக வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ள 200 ஏக்கர் நிலம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வனவளத் திணைக்களத்துக்கு மாவட்டச் செயலர் பணித்துள்ளார்.*

வவுனியா மாவட்டத்தில் ஊற்றுப்புலம் பகுதியிலுள்ள குளத்தை வவுனியா கமநல சேவைத் திணைக்களம் சீரமைக்க அனுமதிக்காத வனவளத் திணைக்களம் அநுராதபுரம் கமநல சேவைத் திணைக்களம் சீரமைப்பதற்கு மட்டும் அனுமதிப்பதன் உள்நோக்கம் என்ன? என்றும் அந்தப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட ஏக்கர் காடு வெட்டப்பட்டு இரகசிய குடியேற்றத்துக்குத் திட்டமிடப்படுவதாகவும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கடந்த மாதம் கடிதமூலம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பான உண்மைத் தன்மையை அறிக்கையிடுமாறு வவுனியா வடக்குப் பிரதேச செயலரிடம் மாவட்டச் செயலர் கோரியிருந்தார்.

ஊற்றுப்புலம் பகுதியில் இரகசியமாக மேற்கொள்ளத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றத்துக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கும் வயல் செய்கையின் பயன்பாட்டுக்காகவுமே குறித்த குளம் இரகசியமாகச் சீரமைக்கப்படு வதாகவும் 200 குடும்பங்களைக் குடியமர்த்த காடுகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளன என்றும் அந்தப் பகுதியில் இரு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளன என்றும் வவுனியா வடக்கில் வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் கச்சல்சமணங்குளம் என்னும் தமிழ் பெயருடைய குளத்தை தற்போது சப்புமஸ்கஸ் கொட எனப் பெயர்மாற்றப்பட்டு சீரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெறுகின்றன. இவ்வாறு இடம்பெறும் பணிகள் அனைத்துக்கும் அநுராதபுரத்தில் இருந்து இரகசியமாகவே பணியாளர்கள் காட்டு வழியாக அழைத்து வரப்படுகின்றனர். உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சத்தியலிங்கம் கோரியிருந்தார்.

இவை குறித்து ஆராய்ந்து பதிலளிக்குமாறு மாவட்டச் செயலர் பிரதேச செயலருக்குப் பணித்திருந்தார்.

பிரதேச செயலர் குறித்த பகுதியில் காடு துப்புரவு செய்தமை தொடர்பில் எவரும் தகவல் தெரிவிக்கவும் இல்லை. இதுதொடர்பில் ஆராயச் சென்றவேளையில் எவருமே இருக்கவில்லை. அதேபோன்று இங்கே இடம்பெறும் குள அபிவிருத்தி தொடர்பாகவோ அல்லது புத்தர் சிலை தொடர்பிலும் தரவுகள் எதுவும் தமக்குக் கிட்டவில்லை என்று பதிலளித்துள்ளார். இதன் அடுத்த கட்டமாக, காட்டுப் பகுதியை நிர்வகிக்கும் திணைக்களம் என்ற வகையில் அதற்கான பதிலை எழுத்தில் வழங்குமாறு கோரி வனவளத் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-105)





## விஞ்ஞான வாரத்தின் முதல் நாள் கண்காட்சி

கொடிகாமம், மார்ச் 13

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் விஞ்ஞான வாரத்தின் முதல் நாள் கண்காட்சி கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபன் கலந்து கொண்டார்.

கண்காட்சியை பல பாடசாலைகளிலிருந்தும் வருகை தந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிட்டனர். (க-159)





## வாழ்வாதார உதவிவழங்கல்

முல்லைத்தீவு,மார்ச் 13

புளியங்குளம் முத்துமாரி நகர்ப் பகுதியில் விபத்தில் சாவடைந்த சத்தியநாதனின் குடும்பத்துக்கு வாழ்வாதார உதவியாக மாடும் கன்றும் எழுகை அமைப்பால் வழங்கிவைக்கப்பட்டது. (க-222)

## தென்னங்கன்றுகள் கையளிப்பு

வவுனியா.மார்ச் 13

பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தால் உதவிக்கரம் நீட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாணவர்கள் 105 பேருக்கு தென்னங்கன்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக நாச்சிகுடா கிராம அலுவலகர் பிரிவில் ஜேம்ஸ்புரம் தூய ஆவியார் ஆலயத்தில் மாலை நேர வகுப்பு மாணவர்கள் 65 பேருக்கும், கரடிகுன்று நாகபூசணி அம்மன் ஆலய அறநெறி மாணவர்கள் 40 பேருக்கும் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

பொன்மணி அறக்கட்டளையின் நிறுவுனர் கு. முத்துக்குமாரால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.(ஜ-222)



## கல்வி ஊக்குவிப்பு உதவி

முல்லைத்தீவு,மார்ச் 13

பொன்மணி அறக்கட்டளை நிறுவனத்தால் குமுழமுனை அ.த.க பாடசாலையில் தரம் 2 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையாக 28 ஆயிரத்து 600 ரூபா நிதி வழங்கி வைக்கப்பட்டது.

இந்த் நிதியை பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் கணேசலிங்கம் நிமேஷ் வழங்கியுள்ளார். மேலும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் 12 பேருக்கு புத்தகபைகளும் பொன்மணி அறக்கட்டளை நிதியத்தால் வழங்கி வைக்கப்பட்டது. (க-222)



## கல்வித் துறையின் போராட்டத்துக்கு சகலரும் ஒத்துழையுங்கள்

பொகவந்தலாவ, மார்ச் 13

நாடுமுழுவதும் இன்று நடைபெறவுள்ள ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இலங்கை கல்விச் சமூக சம்மேளனத்தின் பொதுச்செயலர் ஆர்.சங்கரமணிவண்ணன் கோரியுள்ளார்.

மலையகத்தில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இன்றைய போராட்டத்தில் ஈடுபடவுள்ளன. பிள்ள்ளகளின் பாதுகாப்பில் முன்னரைவிட இன்று கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (த)

## சிறுபோகம் தொடர்பான முன்னோடிக் கூட்டம்

நீர்ப்பாசனக் குளமான முத்து ஐயன்கட்டுக்குளத்தின் கீழான காணிகளில் மேற்கொள்ளப்படும் சிறுபோகம் தொடர்பிலான முன்னோடிக் கூட்டம் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனக் காரியாலயத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் விஜயரவி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இம்முறை குளத்தில் போதிய தண்ணீர் உள்ளதால் குளத்தின் கீழ் உள்ள நீர் பாயக்கூடிய காணிகள்செய்கைக்குஉட்படுத்த முடியும் என்பதனை கருத்திற்கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கிளை வாய்க்கால்கள் இன்று தொடக்கம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் துப்புரவு செய்யப்படவேண்டும் எனவும்தீர்மானிக்கப்பட்டது.

இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டு எதிர்வரும்18 ஆம் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்தலைமையில்கூட்டம்இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஜ-500)



## மருத்துவமனை வளாகம் துப்புரவு செய்யப்பட்டது

வவுனியா, மார்ச் 13

வவுனியா, பாவற்குளம் மருத்துவமனையின் சுற்றாடல் கனரக வாகனத்தின் உதவியுடன் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டது.

பாவற்குளம் கிராமத்தின் பொதுமக்கள் மற்றும் பாவற்குளம் மருத்துவமனை அதிகாரிகளின் வேண்டுகோளின் அடிப்படையில், புலம்பெயர்ந்து வாழும் பாவற்குளம் உறவுகளின் அனுசரணையுடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

துப்புரவு செய்யப்பட்ட பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மிக விரைவில் பயன் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டு, மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# இயற்கை வழியில் பயிரிட்ட நஞ்சற்ற நெல் அறுவடை

மன்னார், மார்ச் 13

மன்னார் மாவட்டத்தில் இயற்கை வழியில் பயிரிட்ட நெல் அறுவடை வயல்விழா நேற்று இடம்பெற்றது. பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகமும், அடம்பன்பண்ணையும் இணைந்து அறுவடையை மேற்கொண்டன. மன்னார் அடம்பன் பண்ணையில் செய்யப்பட்ட பயிரே அறுவடை செய்யப்பட்டது.



கிருமிநாசினிகள் எவையும் இன்றி, இயற்கை பசளைகள், மற்றும் பூச்சிவிரட்டிகள், இயற்கை ஊக்கி என்பவற்றைப் பயன்படுத்தி இந்த நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இப் பயிர்ச்செய்கை அடம்பன் பண்ணையில் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒரு ஏக்கர் நெற்செய்கையே நேற்று அறுவடை செய்யப்பட்டது.

இயற்கை வழி இயக்கம், இயற்கை வழியில் தனியே நெல்லை மட்டும் உற்பத்தி செய்யாது, அனைத்து உணவுகளையும் உற்பத்திசெய்ய ஆரம்பித்துள்ளன. மரக்கறிகளாக இருந்தாலும், இறைச்சி, முட்டை போன்ற உணவுகளாக இருந்தாலும் இயற்கை முறையில் நஞ்சின்றி அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. அடம்பன் பண்ணையிலும் அந்த உற்பத்திகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. நஞ்சற்ற உற்பத்தியை மக்கள் நுகர வேண்டும் என்று கோரப்பட்டுவரும் நிலையில், அவ்வாறு நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்து அதைச் சந்தைப் படுத்துவதற்கு தற்போது இயற்கை வழி இயக்கம் முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு என்று வடக்கு மாகாணத்தின் அனைத்து இடங்களிலும் நஞ்சற்ற உணவுகள் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற நிகழ்வில் மாகாண விவசாயப்பணிப்பாளர் எஸ்.சிவக்குமார், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் ஜனாப் கே.எம்.ஏ.சுக்கூர் இயற்கை வழி இயக்கத்தைச் சேர்ந்த மருத்துவர் பிரபு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் குழு, மன்னாரிலும் பெரியமடு மற்றும், இலுப்பைக்கடவை ஆகிய கிராமங்களில் இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் உட்பட ஏனையபகுதிகளில் இயற்கையான முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். அறுவடையைத் தொடர்ந்து சிறப்புக் கலந்துரையாடலும் நடைபெற்றது. (க-21)

## 700 கிலோ பீடி இலைகளுடன் மன்னாரில் நால்வர் கைது

மன்னார், மார்ச் 13

மன்னார் உறுமலை கடற்பரப்பில் வடமத்திய கடற்படை கட்டளை தலைமையக அதிகாரிகளால் 700 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் கடற்படைக் கட்டளைத் தலைமையத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, 15 மூடைகளில் பொதியிடப்பட்டிருந்த 706.32 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன. இதன் போது சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்தோடு, கைப்பற்றப்பட்டுள்ள பீடி இலை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவையாக இருக்கலாம் எனக் கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் 26, 33, 34 மற்றும் 39 வயதுடைய மன்னார் மற்றும் பேசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலை தொகை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண ஆயத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்தது. (க-21)



## மகளிர் தின நிகழ்வு

வவுனியா, மார்ச். 13

"அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக பெண்களே அணிதிரள்வீர்" எனும் தொனிபொருளில் பன்னாட்டு மகளிர் தினநிகழ்வு வவுனியாவில் நடைபெற்றது.

சிதம்பரபுரம் உதயம் சனசமூகநிலைய மண்டபத்தில் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட புதிய சிந்தனை பெண்கள் அமைப்பின் முக்கியஸ்தர் பி.பிரசாந்தினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெண்விடுதலை செயற்பாட்டாளர்களான செ. இலட்சுமி, நி.பிரவீனா, பி. மோகனதர்சினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தனர். தற்காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான, நுண்நிதிகடன், தவறானமுடிவெடுத்து உயிரை மாய்த்தல், வறுமை, வேலைவாய்ப்பின்மை போன்றவை தொடர்பாகவும், அவற்றை கையாளும் வழிமுறைகள் தொடர்பாகவும் நிகழ்வில் பேசப்பட்டது. நிகழ்வில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் கலந்துகொண்டிருந்தனர். (க-110)

*சிலாவத்துறைக் காணி விடுவிப்பு*

## செயற்பாட்டில் இறங்கியது மன்.மாவட்டச் செயலகம்

மன்னார், மார்ச் 13

கடற்படையின் பிடியில் உள்ள சிலாவத்துறைக் காணி விடுவிப்புத் தொடர்பில் அரச தலைவருக்குத் தெரியப்படுத்தப்படுத்த மன்னார் மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ஒருவரின் ஆலோசனைக்கு இணங்கவும், காணி விடுவிப்புக்காகப் போராடும் மக்களுக்கு அந்தக் காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனுமேயே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. சிலாவத்துறைப் பகுதியில் உள்ள சுமார் 28 ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து கடற்படையினர் அங்கேயே நிலைகொண்டனர்.

மக்களுக்கு அரசு வழங்கிய பொமிற் காணிகள், மற்றும் உறுதியுள்ள மக்களுடைய காணிகளும் உள்ளடங்குகின்றன. மக்கள் அது தொடர்பில் அதிகாரிகள் முதல் அமைச்சர்கள் வரை அனைவரிடத்திலும் கோரிக்கை விடுத்திருந்தனர். தற்போது அந்தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தங்களை குடியமர்த்துமாறு கோரி அறவழிப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அவர்களுடைய போராட்டம் 20 ஆவது நாளைத் தொட்டுள்ளது. மக்களுடைய போராட்டம் தொடர்பாக மாவட்ட அரச அதிகாரிகள், அமைச்சர் ரிசாட், கடற்படையினர் ஆகியோருக்கிடையில் இரண்டு கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் சாதகமான பதில்கள் எவையும் கிடைக்க வில்லை என்று மக்கள் கொந்தளித்தனர். மக்களுடைய போராட்டம் தொடர்பில் பிரதேச செயலர் மாவட்டச் செயலரூடாக அரச தலைவரின் செயலருக்கு கடிதம் அனுப்பவுள்ளதாக உதயனுக்குத் தெரிவித்தார். அதே வேளை மாவட்டச் செயலகமும் காணி விடுவிப்புத் தொடர்பாக அரசதலைவரின் செயலருக்கு தெரியப்படுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (க-21)

## தவக்கால தியானங்கள்

## நம்பிக்கை நலம் தரும்

பிறவியிலேயே இரு கரங்களின்றிப் பிறந்த டோனிமெலண்டஸ் உலகின் மிகப் பெரிய கிற்றார் இசைக் கலைஞர். சிறந்த பாடகர். 1987ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இவர் கிற்றார் இசைத்து இறைவனைப் புகழ்ந்து பாடிய போது திருத்தந்தை உட்பட அனைவரும் எழுந்து நின்று ஆனந்தக் கண்ணீர் பெருக இறைவனைப் புகழ்ந்து நன்றி செலுத்தி பாராட்டி வாழ்த்தினர். கருவறையில் இருந்தபோது தாய் உட்கொண்ட மருந்தின் விளைவு டோனியை கரங்களின்றிப் பிறக்க வைத்தது.

டோனியின்-தந்தை கொடுத்த உற்சாகத் தூண்டுதலால் தனது கால்களின் துணையினால் கிற்றாரை இசைத்துப் பாடுவதில் வல்லவரானார்.

எம்மை அழுத்தி வீழ்த்தும் எந்தச் சுமையையும் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு எமக்குக் குறிக்கப்பட்டுள்ள பந்தயத்தில் மனஉறுதியோடு ஓடினால் வெற்றி எமக்கே.

நாம் செய்ய வேண்டியது எம்மில் நம்பிக்கையை விதைத்து முளைக்கச் செய்து நிறைவு செய்பவரான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்பதே. எனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கி யது. அமைதியுடன் போ! நோய் நீங்கி நலமாயிரு! அஞ்சாதீர்! நம்பிக்கையை மட்டும் விடாதீர்! எழுந்திடு. இத்தகைய வாழ்வளிக்கும் வார்த்தைகளை வாழ்விக்கும் சக்தியாக உயிர் மூச்சாக உச்சரிக்கும் இயேசுவிடமிருந்து நாம் பெற்று பிறர் உயிர் பெற குணம் பெற துணை நிற்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## வவு.குளங்களில் குப்பைகள் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை

வவுனியா, மார்ச் 13

வவுனியா நகரசபைக்குட்பட்ட குளங்கள் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

வவுனியா வேப்பங்குளம் மற்றும் கறையான்குளம் என்பவற்றை நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன், நகரசபை உறுப்பினர் லரீவ், தவிசாளரின் பிரத்தியேகச் செயலர் சஜீந்திரா ஆகியோர் நேற்று முன்தினம் பார்வையிட்டனர். குளங்களில் குப்பைகளை வீசுவது கண்டறியப்பட்டுள்ளதுடன், குப்பைகளை வீசுவோரை அடையாளப்படுத்தும் சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த தவிசாளர் இனி வரும் நாள்களில் குளங்கள் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் தெரிவித்தார். (க-110)



# பதினைந்தாயிரம் ஏக்கரில் இரணைமடுவில் சிறுபோகம்

கிளிநொச்சி,மார்ச் 13

இரணைமடுக் குளத்தின் கீழான 2019 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை 15 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற இரணைமடு சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரணைமடுக்குளம் சீர மைப்புக்கு முன் 8 ஆயிரத்து 500 ஏக்கர் வரை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை, தற்போது 15 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில் ஒன்று தொடக்கம் ஆறு ஏக்கர் வரை வயற்காணிகளை கொண்டவர்களுக்கு மூன்று ஏக்கரும், ஆறு தொடக்கம் எட்டு ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு நான்கு ஏக்கரும், எட்டு தொடக்கம் பத்து ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு ஐந்து ஏக்கரும், பத்து தொடக்கம் 15 ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு ஆறு ஏக்கரும், 15 தொடக்கம் 20 ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு ஏழு ஏக்கரும், இருபதுக்கு மேல் வயற்காணிகளை கொண்டவர்களுக்கு எட்டு ஏக்கரும் சிறுபோகம் நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இரணைமடு குளத்திலிருந்து சிறுபோக நெற்செய்கைக்கான நீர் ஏப்ரல் 12 ஆம் திகதி ஆரம்பித்து ஒகஸ்ட் 7 ஆம் திகதி வரை திறந்து விடப்படும் என்றும் மே 2 ஆம் திகதிக்கு முன்னர் மூன்று அல்லது மூன்றரை மாதங்கள் கொண்ட பரிந்துரைக்கப்பட்ட நெல் இனங்கள் விதைக்கப்பட வேண்டும் எனவும், கால்நடைகளை ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும் எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம் பெற்றது. இதில் கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் என். சுதாகரன், புதிதாக நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளராக பதவியேற்றுள்ள இராஜகோபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (க-36)

## நகைகளை விற்க முயன்றவர் நேற்றுக் கைது

களவாடிய நகைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டன என்கிறது பொலிஸ்

வடமராட்சி,மார்ச் 13

யாழ்ப்பாண நகரில் உள்ள கடை ஒன்றில் நகையை விற்க முற்பட்டவரைப் பொலிஸார் கைது செய்தனர். யாழ்ப்பாண நகரத்திலுள்ள நகைக் கடை ஒன்றில் திருடப்பட்ட நகைகளையே அவர் விற்க முற்பட்டதாகக் குற்றம் சுமத்தும் பொலிஸார், அதன் காரணமாகவே அவரைச் சந்தேகத்தில் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி வதிரியை சேர்ந்த நபர் ஒருவர் யாழ்ப்பாண நகரில் உள்ள நகை கடை ஒன்றில் திருடப்பட்டதாக கூறப்படும் நகைகளை விற்பனை செய்யச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் மீது கடை முதலாளிக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரி ஜெரோசனுக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அவை திருட்டுநகை என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரைக் கைது செய்ததுடன் இவருடன் தொடர்புடைய முதன்மை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்யச் சென்ற சமயம் அவர் உந்துருளியை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட 28 வயதுடையது சந்தேகநபரையும், தங்க நகைகளும், உந்துருளியும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப் படுத்தப்பட்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-26)

## போட்டிப் பரீட்சை பெறுபேறு வெளியீடு

விரைவில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணத் திணைக்களங்களில் நிலவும் அலுவலக உதவியாளர் வெற்றிடத்துக்கு இடம்பெற்ற போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத் திணைக்களங்களில் நிலவும் 102 அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் பகிரங்க விண்ணப்பம் கோரப்பட்டு 6ஆயிரம் விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது. விண்ணப்பதாரிகளுக்குப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்த கட்டமாக நேர்முகத் தேர்வுக்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

நேர்முகத் தேர்வில் மாவட்ட ரீதியில் கவனம் செலுத்தும் வகையில் புள்ளிகள் கணிக்கப்பட்டு அனுமதிக்காக ஆளுநரிடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. போட்டிப் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கும் மேல் பெற்ற வர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு அவர்களில் இருந்து 102 பேர் தேர்வு செய்யப்படவுள்ளனர். என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-105)




## கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு ஆதாரங்களுடனான அறிக்கை

தமிழர் மரபுரிமைப் பேரவை ஐ.நாவில் சமர்ப்பித்தது

கொழும்பு, மார்ச் 13

வடக்கு - கிழக்கில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்பான அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் சபையின் நாற்பதாவது கூட்டத்தொடரில் தமிழர் மரபுரிமைப் பேரவை சமர்ப்பித்தது. கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காகச் சென்றுள்ள இணைத்தலைவர் வி.நவநீதன் ஐ.நா மனித உரிமைகள் சபையின் அதன் உறுப்பு நாடுகளுக்கும் அறிக்கையை நேற்று முன்தினம் சமர்ப்பித்தார்.

அதில் மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஊடாக மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள், தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கல்கள், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தின் ஊடாக காணிகள் அபகரிக்கப்பட்டுதமிழ் மக்களுடைய பொருளாதாரம் பாதிக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் ஆதாரங்களுடன் கூடிய அறிக்கையாக ஐ.நா வுக்கும் அதன் உறுப்பு நாடுகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பக்க நிகழ்வுகளிலும் கலந்து கொண்டுள்ளார். (த)

## ஆளுநரின் பொதுமக்கள் தினம்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

வடக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் தினம் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. வடக்கு அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளது.

இதன்போது ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் முன்வைக்க வேண்டும் என்று கருதும் தமது கோரிக்கைகளைப் பொதுமக்கள் எழுத்து மூலமாக நேரடியாக கையளிக்க முடியும். பொதுமக்களின் நலன்கருதி குறித்த கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக தனியான பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (ஐ)



## சிசுக்கள் சிறப்புச் சிகிச்சை பராமரிப்பு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 13

சிசுக்கள் சிறப்புச் சிகிச்சை பராமரிப்பு நிலையம் தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்றுக் காலை பதினொரு மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமாகாணத்தின் ஐந்தாவது சிசுக்கள் சிறப்புச் சிகிச்சை பராமரிப்பு நிலையமான இது, 50.01மில்லியன் ரூபா யுனிசெப் நிறுவனத்தின் நிதியில் நிர்மாணிக்கப்பட்டது.

தெல்லிப்பழை மருத்துவமனைப் பணிப்பாளர் யோ.திவாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன், யாழ் பிராந்திய பணிப்பாளர் தேவனேசன், வட மாகாண யுனிசெப் ஒருங்கிணைப்பாளர் சுதர்மன், வலி.வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க-26)

## நாரந்தனை வீதி சீரமைக்க மன்னாரில் இருந்து கிரவல்

ஆளுநரின் செயலர் பரிந்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் நாரந்தனையில் இடம்பெறும் வீதி சீரமைப்புக்கு 50 டிப்பர் கிரவல் மணல் வழங்குமாறு மன்னார் மாவட்டச் செயலருக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மணல் தட்டுப்பாடு உள்ள மாவட்டத்தில் இடம்பெறும் பணிகளை முடிவுறுத்த அந்த மாவட்டச் செயலர் முனைவர் உள்ள மாவட்டத்தின் செயலருக்கு வேண்டுகோள் விடுத்தால் அது ஆராயப்பட்டு மணல் அனுமதி வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் தீவகத்தில் இடம்பெறும் வீதி வேலைகே 50 டிப்பர் மண் வழங்குமாறு பரிந்துரைசெய்யப்பட்டுள்ள மணல் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் அதிக பணிகள் மணல் தட்டுப்பாடு காரணமாக நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தீவகத்தில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கே 50 டிப்பர் மணல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது தொடர்பில் ஆளுநரின் செயலரிடம் கேட்டபோது:

புங்குடுதீவு நாரந்தனையில் இடம்பெறும் வீதி வேலைப் பணிகள் கடந்த வருடம் நிறைவுசெய்திருக்க வேண்டும். மண் இன்மை காரணமாக நீண்டகாலமாக இழுபறிப்படுகின்றது. ஏற்கனவே மண் அனுமதி இருந்தும் கிடைக்கவில்லை. அதனால் விரைவு படுத்தி பணியை முடிவுறுத்தும் வகையில் மண் விநியோகிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டது என்று தெரிவித்தார். (த-105)

## ஈருருளிகளின் இலக்க தகடுகள் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச் 13

சாவகச்சேரி நகரசபையில் இவ்வருடத்துக்குரிய ஈருருளிகளுக்கான இலக்கத் தகடுகள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈருருளிகள் வைத்திருப்போர் தமது ஈருருளிகளுக்கான இலக்கம், ஈருருளியின் வகை போன்ற விவரங்களுடன் நகர சபைஅலுவலகத்துக்கு வருகை தந்து மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு சபைச் செயலர் கா. சண்முகதாசன் அறிவித்துள்ளார். எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்குப் பின்னர் பொலிஸார் வீதிப் பரிசோதனைகளின் போது ஈருருளிகளுக்குரிய இலக்கத் தகடுகள் பார்வையிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# திருடர்கள்தான் எம்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிக்கிறார்

கொழும்பு, மார்ச் 13

திருடர்களே தங்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.



நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வேடிக்கைகள் இடம்பெறுகின்றன. நாட்டில் திருடியவர்களே எம்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். ஊழல்மோசடி திணைக்களங்களுக்குச் சென்று முறைப்பாடு செய்கின்றார்கள். பாடசாலை மாணவர்களுக்கான வவுச்சர் முறையிலான சீருடை வழங்கல் மூலம் அமைச்சர் ஒருவர் தனது பொக்கட்டுக்குள் இருபத்தைந்து முப்பது கோடிகளை போட்டுக்கொள்வதற்கு ஏதுவாக இருந்த நிலமைகளைத் தடுத்து நிறுத்தியுள்ளோம்.

இதுதான் உண்மையாக இருக்கின்றது. இவ்வாறு இருக்கையில் தான் வவுச்சர் மூலமும் நான் ஊழல்களை புரிவதாகப் பரப்புரை செய்கின்றார்கள். அதேபோன்று சுரசா காப்புறுதித் திட்டத்தைத் தனியார் துறையினரிடத்தில் வழங்கியதாகக் கூறுகின்றார்கள். நான் அவ்வாறு செய்யவில்லை - என்றார். (து-31)

# சுற்றாடலுக்கு ஏற்றதாக மருத்துவமனையை அமைக்கப் பணிப்பு



கொழும்பு, மார்ச் 13

தெனியாயவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள ஆதார மருத்துவமனையை சுற்றாடலுக்கு ஏற்ற வகையில் அமைக்குமாறு அமைச்சர் சாகல ரத்னாயக்க பணித்துள்ளார்.

இருதய சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் 600 கட்டில்களைக் கொண்ட நவீன கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் அங்கு சென்ற அமைச்சர் அங்கு இடம்பெறும் பணிகளை அவதானித்து மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார். (து)

# மிகச்சிறந்த தலைமைகள் தேவை

மட்டக்களப்பு, மார்ச் 13

நாட்டுக்குச் சிறந்த தலைமைத்துவங்களின் தேவைப்பாடு அதிகமாகவுள்ளது என்று கிழக்கு மாகாண சுதந்திரக் கட்சியின் முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார்.

ஏறாவூர் பாடசாலை நிகழ்வில் உரையாற்றுகையில், சிறந்த தலைமைத்துவங்கள் இல்லாததால் நாடு அதிக இழப்புக்களைச் சந்தித்துள்ளது. ஆளுமையுள்ள அரசியல் தலைமைத்துவங்களின் தேவைப்பாடு அதிகமாகவுள்ளது. அரசியலாயினும் நிர்வாகமாயினும்சரி சிறந்த ஆளுமை கொண்ட தலைமைத்துவங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து)

# கூட்டணியை அழிக்க ஏராளம் கறுப்பாடுகள்

## வேலுகுமார் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 13

குறுகிய காலப்பகுதிக்குள் அரசியல் களத்தில் பல சாதனைகளுடன் வீறுநடைபோடும் தமிழ் முற்போக்கு கூட்டணியை இல்லாதொழிப்பதற்கு கறுப்பாட்டுக் கூட்டமொன்று கங்கணம் கட்டிச் செயற்பட்டுவருகின்றது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசில் அங்கம் வகிப்பதால், மலையக மக்களுக்கான அனைத்துத் தீர்வுகளையும் தங்கத்தட்டில் வைத்து எவரும் தரப்போவதில்லை. சில விடயங்கள் கிடைக்கின்றன. பலவற்றை நாம் பேச்சு நடத்தி - போராடிப் பெற்றுவருகின்றோம்.

இலக்கை நோக்கிய பயணத்தில் சற்று தாமதம் ஏற்படலாம், பின்னடைவுகள் வரலாம். அவற்றை தோல்வியாகக் கருதி - மனம் நொந்து ஓரமாக ஒதுங்கினால் எதுவும் நடக்கப் போவதில்லை. அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது என்று தெரிவித்தார். (து)

# பதவிகளைத் தூக்கி எறிவோம் என்று கூறியோர் மௌனம் ஏன்?

## கேட்கிறார் அளுத்கமகே எம்.பி.

கொழும்பு, மார்ச் 13



வரவு - செலவுத்திட்டத்தில் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு அதிகரிக்காத பட்சத்தில் பதவிகளைத் தூக்கி எறிவோம் என்று அமைச்சர்களான திகாம்பரம், மனோகணேசன், இராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறினர். தற்போது ஏன் மௌனிகளாகவுள்ளனர்?

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே.

மற்றொரு உறுப்பினரான வடிவேல் சுரேஷ் பெற்றோல் ஊற்றி தீக்கொழுத்த முனைந்து நாடகமாடினார். அதன் பின்னர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வழங்குவதற்கு தலைமை அமைச்சர் ரணில் வாக்குறுதி அளித்திருந்தார்.

அது வரவு - செலவுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைக்குவரும் என்றும் கூறினார்கள்.

தற்போது 50ரூபா அதிகரிக்கப்படும் என்று அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க அறிவித்தார். ஆனால் அந்த 50ரூபா வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. 50ரூபா வாக்குறுதி அளித்தவர்கள் எங்கே சென்றுவிட்டார்கள்? தோட்டத்தொழிலாளர்களின் 50ரூபா கோரிக்கையை ஒருபக்கத்தில் வைப்போம். இராஜாங்க அமைச்சராக இருக்கும் இராதாகிருஷ்ணனுக்கு இன்னமும் அலுவலகமே வழங்கப்படாத நிலமை தான் இருக்கின்றது - என்றார். (து-31)

# கூட்டமைப்பு கபடத்தனமான நிலைப்பாடு

## கூறுகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 13

ஐ.நா. பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறினால் அரசு பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும், இரா.சம்பந்தன் தெரிவித்திருப்பது பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகின்ற செயற்பாடு என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது அதன் கபடத்தனமான இரட்டை அரசியல் நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார். (து)



# இலங்கை– புரூண்டி இருதரப்பு ஒப்பந்தம்

இலங்கை - புரூண்டி நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை நிறுவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இது கைச்சாத்திடப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியும் தூதருமான அம்ரித் றொகான் பெரேரா மற்றும் புரூண்டியின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதரும் நிரந்தர வதிவிடப்பிரதிநிதியுமான அல்பேட் சிங்கிரோ ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்காக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார துறைகளில் இருக்கும் நட்பு உறவுகளையும் ஒத்துழைப்பையும் இந்த ஒப்பந்தம் மேம்படுத்தும் என்று இலங்கை அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. (து)

# ரணில் லேசாக எச்சரித்தால் உறுப்பினர்கள் பின்செல்வர்

## பொதுமக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

அரசின்வரவு-செலவுத்திட்டத்தைத் தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகிவருகின்றனர் என்று கூறினாலும், ரணில் விக்கிரமசிங்க குரல் எழுப்பினால் பயந்து அவருக்கு ஆதரவாக வாக்களித்துவிடுவர். இவ்வாறு, பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கட்சியின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ஜீப் வாகனங்களை வைத்திருப்பவர்கள் அதனை விற்று ஈருருளிகளை வாங்கத் தயாராகிவருகின்றார்கள். மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்த காலத்தில் ஹொண்டா சிவிக் என்ற வாகனத்தின் பெறுமதி 35முதல் 40இலட்சம் வரையில் தான் இருந்தது. தற்போது 75முதல் 80வரையில் அதிகரித்தாகிவிட்டது. வாகனமொன்றை வாங்குபவருக்குத் தூக்குக் கயிறொன்றை வழங்க வேண்டும். ஏனென்றால் வாகனத்தை வாங்கிய பின்னர் தூக்கில் மாட்டி உயிர்மாய்ப்பதைத் தவிர வேறுவழி கிடையாது. ஹோம் சுவீட் ஹோம் திட்டத்தில் ஒருவர் கடனைப் பெறுவாராயின் 70 ஆயிரத்து 677ரூபா வட்டியுடன் தவணையொன்றுக்காகச் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு இருந்தால் இந்த நாட்டில் உள்ள இளையோர் திருமணம் முடிப்பார்களா?

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு- செலவுத்திட்டத்தில் அரசதலைவரின் ஒதுக்கீட்டைத் தோற்கடிக்கத் தயாராகி வருகின்றார்கள். ஆனால் அவர்களால் எதிர்த்து வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்படப்போகின்றது. காரணம், தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அழைத்து வாயைமூடிக் கொண்டு கை உயர்த்துங்கள் என்று கூறுவார்.

அதனை அவர்கள் செய்தாக வேண்டிய நிலைமைக்குள் உட்படுவார்கள் - என்றார். ஐ.தே.கவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த வருட வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளனர் என்று முன்னர் கூறியிருந்தனர். (து-61)

# ராஜபக்சவினர் திறமையானவரென சிலர் சுயநலக் கனவு காண்கிறனர்

## அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவிக்கிறார்

கொழும்பு, மார்ச் 13

ராஜபக்ச குடும்பத்தினரே இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சிறப்பாகக் கொண்டு நகர்த்தக்கூடியவர்கள் என்ற நிலைப் பாட்டில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் சுய இலாபம் கருதி அவ்வாறு கூறிக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஒருவிடயத்தைத் தெளிவாகக் கூறுகின்றேன். நாம் எமது எதிர்கால பொருளாதாரத்தை மையமாக வைத்தே வரவு - செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். எதிர்காலத்திலும் நாம் ஆட்சிக்கு வருவோம். மீண்டும் வரவு - செலவுத்திட்டத்தை அடுத்தாண்டு சமர்ப்பிப்போம் - என்றார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் ஏரான் விக்கிரமரட்ணவும், ஐக்கிய தேசிய முன்னணியின் பொது வேட்பாளரே அடுத்த அரசதலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெறுவார்கள். அவர்களே இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வார்கள். அதில் எந்த வித மாற்றமுமில்லை என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் - என்றார். (து-31)

# ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அவகாசம் வேண்டாம்

## பிரதி முதல்வரின் தீர்மான வரைவு முதல்வர் ஆனல்ட்டால் நிராகரிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 13*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக்கூடாது என்று பிரதி முதல்வர் ஈசனால் கொண்டுவரப்பட்ட தீர்மான வரைவு, முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்டால் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து சபையில் நேற்றுப் பெரும் குழப்பநிலை ஏற்பட்டது. இறுதிவரை அந்தத் தீர்மானவரைவு பரீசிலனைக்காக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**பிரதி முதல்வரின் தீர்மான வரைவு**

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வு மாநகரசபையின்கட்டடத்தொகுதியில் முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்டின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, இலங்கையை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு கோருவதும், தமிழ் தேசிய மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் பொது வாக்கெடுப்புக்கு கோருதலுமான தீர்மான வரைவை கொடுத்திருந்தேன். அந்தத் தீர்மான வரைவு இன்றைய கூட்டத்தொடரில் இணைக்கவில்லை. இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தத் தீர்மான வரைவை தற்போதைய நிகழ்ச்சி நிரலில் இணைக்க வேண்டும் என்று ரெலோ கட்சியைச் சேர்ந்த மாநகர பிரதி முதல்வர் துரைராசா ஈசன் மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்டிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, சபையின் தேவை கருதியும், மக்களின் தேவை கருதியும் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியுமென உறுப்பினர் ஒருவர் கூறினார். நிகழ்கால அரசியல் போக்கில் பிரதி முதல்வரால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மான வரைவு அவசியமானதென்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். அத்துடன், இந்தத் தீர்மான வரைவில் முக்கியத்துவம் சார்ந்து இந்தத் தீர்மான வரைவுக்கு வலுச்சேர்க்க தாம் விரும்பு கின்றோம் என்று முன்னணியின் உறுப்பினர்கள் தெரிவித்தார்.

**முதல்வரின் பதில்**

இதன்போது, குறுக்கிட்ட முதல்வர் 'இந்தத் தீர்மான வரைவை சபையில் எடுப்பதில்லை என்பது உறுப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்ட விடயம். அதற்கமைவாக இந்தத் தீர்மான வரைவை சபையில் எடுக்கவில்லை. அவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்ட போது, தீர்மான வரைவை சமர்ப்பித்த பிரதி முதல்வரும் உடனிருந்தார்' என்று குறிப்பிட்டார். ஏனைய உறுப்பினர்கள்இந்தத்தீர்மானத்தை சபையில் விவாதிக்க வேண்டாமென கூறினால், அந்தத் தீர்மானத்தை சபையில் எடுக்கமாட்டீர்களா என பிரதி முதல்வர் ஈசன், முதல்வரைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

இது தனிப்பட்ட பிரேரணை அல்ல. ஒரு பொதுவான பிரேரணை என்பதன் அடிப்படையில், எமது கட்சி அதாவது தமிழ் தேசிய கூட்ட மைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் கூடி இந்தத் தீர்மான வரைவைக் கொண்டு வருவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவத்தால், இந்தத் தீர்மானத்தை எடுக்குமாறு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை. ஆகையால், இந்த விடயம் தெரிந்த நீங்களும், இதை சபையில் எடுத்து சர்ச்சைக்குரிய விடயம் ஆக்க வேண்டாம் - என்றார்.

**ஆதரவளித்த முன்னணி**

முன்னணி உறுப்பினர்கள் பலரும் எழுந்து நின்று தீர்மான வரைவு தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் வலுச்சேர்க்கும் முகமாக யாழ். மாநகர சபையில் இருந்து கால அவகாசம் கொடுப்பதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென உறுப்பினர்கள் கோரினர். பிரதி முதல்வருடைய பிரேரணையை ஏற்காதுவிடில் அவ்வாறான ஒரு தீர்மான வரைவை நான் கொண்டு வருகின்றேன் அதை அனுதியுங்கள் என்று முன்னணி உறுப்பினர் கிருபாகரன் கோரினார்.

அதையும் முதல்வர் முற்றாக மறுத்தார். சட்டத்தில் இடமில்லை என்று கூறினார். சட்டப் புத்தகத்தை புரட்டிய கிருபாகரன் சட்டத்தில் இடமுண்டு- என்றார்.

**முதல்வரின் அறிவுரை**

காணாமல் போனோருக்கும், தமிழ் மக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டிய இடங்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். இப்படி ஒரு தீர்மான வரைவைக் கொண்டுவந்து ஜெனிவா கூட்டத்தொடரை இல்லாது செய்கின்ற முயற்சியில் நீங்கள் ஈடுபடுகின்றீர்கள். பிரதி முதல்வர் அதற்கு துணை போகமாட்டார் என்று முதல்வர் ஆனல்ட் கூறினார்.

**வசைபாடிய உறுப்பினர்கள்**

காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது பிரதி முதல்வர் ஈசனுக்கும், முன்னணி உறுப்பினர் கிருபாகரனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதில் ஈசன் கிருபாகரனைப் பார்த்து ஆரம்பத்தில் நீங்கள் எந்த கட்சியில் இருந்தீர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் -என்றார். கிருபாகரன் உடனேயே இருக்கையில் அமர்ந்தார். மற்றுமொரு கட்டத்தில் ரெலோ கட்சியைச் சார்ந்த பிரதி முதல்வருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் மாநகர உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெற்றன. தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள் எந்த இன்னலையும் படவில்லை. பட்டால்தான் அந்த வேதனை புரியுமென பிரதி முதல்வர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். வவுனியாவில் என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். வரலாறு எங்களுக்கும் தெரியும் என்று ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினர் கொந்தளித்தார்.

**பயனற்றுப்போன வாக்குவாதங்கள்**

வாக்குவாதங்கள் வலுப்பெற்ற நிலையில், ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தொடரில் தமிழர் தரப்புக்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ். மாநகர சபையில் இருந்து கால அவகாசம் கொடுப்பதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென உறுப்பினர்கள் கோரினர். அதனை ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதுஎமது நிலைப்பாடு அல்ல என்றார் முதல்வர். இதுஎன்னுடைய உரிமைமீறல், தற்போது எனது தீர்மான வரைவை நிகழ்ச்சி நிரலில் இணைக்க வேண்டும் என்று பிரதி முதல்வர் முதல்வரிடம் கோரினார். உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று அழைத்தனர். அதனை ஏற்க மறுத்த முதல்வர் வாக்கெடுப்பு நடத்தவே முடியாது - என்றார். இறுதிவரையில் ஈசனின் தீர்மான வரைவு சபையில் எடுத்துக்கொள்ளப்படவேயில்லை. (ம-21,106,7)

---

## மதுபான நிலைய கட்டட உரிமையாளருக்கு கடிதம்

வவுனியா,மார்ச் 13

ஓமந்தை பகுதியில் புதிதாக திறக்கபட்ட மதுபான நிலையம் அமைந்துள்ள கட்டடத்தின் உரிமையாளருக்கு வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கபட்டுள்ளதாவது தங்களால் சமர்பிக்கபட்ட கடைகட்டடத்துக்கான கட்டட அனுமதியை 2014 ஆம் ஆண்டு பெற்றுள்ளீர்கள். 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்துக்கு புறம்பாக தாங்கள் இந்தக் கட்டடத்தில் அனுமதியற்ற முறையில் மதுபான சாலை நடத்துவதாக அவதானிக்கபட்டுள்ளது. இதனை உடனடியாக நிறுத்தி பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 96 ,97,98 இன் படி சுகாதாரத்துக் கொவ்வாத கட்டடங்களின் சட்டத்தின் பிரகாரம் ஒரு வருட காலத்தினுள் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு குடிபுகு சான்றிதழுக்கு விண்ணபிக்குமாறு கூறப்பட்டபோதும், இது வரை குறித்த விண்ணப்பம் சமர்பிக்கப்பட வில்லை. எனவே உடனடியாக ஆவணங்களைச் சமர்ப்பித்து குடிபுகு சான்றிதழை பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் தங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)

---

## மகளிர் தினமும் இலவச திருமண நிகழ்வும்

சாவகச்சேரி, மார்ச் 13

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மகளிர் தின விழாவும் இலவச திருமண நிகழ்வும் நாளை மறுதினம் பகல் 9 மணிக்கு எழுதுமட்டுவாழ் படித்த மகளிர் குடியேற் றத்திட்ட மண்டபத்தில் நடைபெறும்.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக சட்டத்தரணி அம்பிகா சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத்தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா அடிகள், வேள்ட் விஷன் நிறுவன பிரதேச முகாமையாளர் கொன்சேகா அனுராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

பிரதேசத்தில் சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் மகளிர்கள் மதிப்பளிக்கப்படுவதுடன், பத்து தம்பதியினருக்கு காலங்கடந்த திருமணப் பதிவும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க -9)

---

## ஆரியகுளம் பாதுகாக்கப்படல் வேண்டும்

### லோகதயாளன் ஆணித்தர வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச்13

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்த மான ஆரியகுளம் பாதுகாக்கப்படல் வேண்டும் அதற்குரிய நடவடிக்கை உடன டியாக எடுக்கப்படல் வேண்டும். இல்லை யேல் நிர்வாக முடக்கல் போராட்டம் நடை பெறும். இவ்வாறுயாழ்ப்பாணம்மாநகரசபை உறுப்பினர் லோகதயாளன் கண் டிப்பான தொனியில் சபைக்கு நேற்றுத் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் இம்மனுவல்ஆனோல்ட்தலைமையில்நேற்றுநடைபெற்றது. இந்த அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆரிய குளம் மாநகர சபைக்கு சொந்தமான சொத்து. அது பாதுகாக்கப்படல் வேண்டும் என்று நான் கடந்த சபை அமர்வில் தெரிவித்து இருந்தேன்.

அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் தெரிவித்து இருந்தார். ஆனால்ஒருமாதகாலமாகியும்இன்றுவரை எந்த நவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தக் குளம் ஆக்கிரமிக்கப்படலாம். அல்லது கைவிட்டு போகலாம் போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. இதனால் அதைப் பாது காக்க வேண்டிய தேவை எமக்கு உண்டு. இனியும்குளத்தைபாதுகாக்கசபை நடவடிக்கைஎடுக்காவிட்டால்நிர்வாகமுடக்கல் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி வரும் - என்றார்.

அதுஎமது அடையாளம். அதைப்பாதுக்கக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதல்வர் பதிலளித்தார். (ம-7)

---

## கிராம எழுச்சித் திட்டத்தில் பாகுபாடான நடைமுறைகள்

### ஈ.பி.டி.பி - முன்னணி இணைந்து போர்க்கொடி

யாழ்ப்பாணம், மார்ச் 13

கிராம எழுச்சித் திட்டத்தில் வட்டாரத்தில் உள்ள தங்கள் கோரிக்கைகள் பெறப்பட வில்லை என்று தெரிவித்து ஈ.பி.டி.பி. கட்சியினர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இணைந்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் போர்க்கொடி தூக்கினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது முதல்வரால் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறவுள்ள அபிவிருத்திகள் பற்றித் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போது ஈ.பி.டி.பி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், எங்களது வட்டாரத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் என்ன வேலைகள் நடைபெறவுள்ளன என்பது எமக்கு தெரியாது. நீங்கள் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்த வேலைத் திட்டங்களை திணிக்க வேண்டாம். வட்டாரத்தில் இருக்கும் எமக்குத்தான் அங்கு எந்த வீதி, எந்தக் கால்வாய் சீரமைக்க வேண்டும் என்று தெரியும். நீங்கள் கட்சி சார்ந்து செயற்படவேண்டாம் - என்றனர். இந்த கருத்துக்கு பதில் வழங்கிய முதல்வர், 'அந்தத் திட்டங்களை மாற்ற முடியாது ஏற்கனவே அந்த வேலை திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டன. இது சபை நிதியில் செய்யப்படும் வேலை இல்லை' - என்றார். (ம-7)

உதயன்


# புதன் பொய்கை

மார்ச் 13, 2019

@UthayanPrint

## யாழ். தமிழ்ச்சங்கம் நடத்திய

# திருவள்ளுவர் விழா




யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த திருவள்ளுவர் விழா கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. யாழ். சிவகணேசன் புடைவைகயத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்த நிகழ்விற்குத் தமிழ்ச்சங்கத் தலைவர் ச. லலீசன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் வரவேற்புரையை தமிழ்ச்சங்கத்தின் பொதுச் செயலர் விரிவுரையாளர் இ. சர்வேஸ்வராவும் முதன்மையு ரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கரா ஜாவும் ஆற்றினர்.

சிறப்பு நிகழ்வாக தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் தலைமையில் 'சிந்தையின் செழுமைக்குப் பெரிதும் வழிகாட்டும் குறட்பாக்கள் அடங்கியிருப்பது அறத்துப்பாலிலா? பொருட்பாலிலா? என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெற்றது. இதில் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி. இரா.செல்வவடிவேல். விரிவுரையாளர் கு.பாலசண்முகன். தமிழகப் பேச்சாளர் த.திருமாறன். லோ.துஷிகரன். ஜீவா.சஜீவன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்டனர். நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் க. அருள்நேசன் நன்றியுரை ஆற்றினார்.

திருவள்ளுவர் விழாவையொட்டித் தமிழ்ச் சங்கத்தாரால் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் தமிழ்ப் பாடத்தைக் கற்கும் மாணவரிடையே திருக்குறள் தேர்வு நடத்தப்பட்டிருந்தது. 620 மாணவர்கள் பங்கேற்ற இந்தத் தேர்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரீட்சை மண்டபங்களில் நடைபெற்றிருந்தது. தேர்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் வெற்றி பெற உதவிய ஆசிரியர்களுக்கும் பரிசுப் பொருளகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.









இராமபுரத்தூர் நிசாந்தன்

# பெரியாழ்வார் திருமொழியில் கண்ணன் திருமேனி அழகு!



தமிழ் இலக்கிய வரலாறு தனிலே பக்தி இலக்கிய மரபும் சிறப்பிடம் பெறுகின்றது. தமிழோடு கலந்த மொழி நடையில் பெரும்பாலான பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. நாயன்மார்கள், மற்றும் ஆழ்வார்களால் பாடப்பட்ட பக்தி இலக்கியங்கள் இன்றும் நம் தமிழ் இலக்கியங்களுடன் ஒன்று பட்டு இலக்கியச் சுவையும், இலக்கிய நயமும் பொதிந்தனவாக மேன்மை பெற்றுள்ளன என்றால் மிகையாகாது.

**கண்ணனை குழந்தையாக புகழ்ந்து பாடிய பெரியாழ்வார்**

விஸ்ணுவைப் போற்றிப் பாடிய ஆழ்வார்களில் பெரியாழ்வாரும் ஒருவர். கண்ணன் மீது பெரும் விருப்பம் கொண்டு அந்தக் கண்ணனைத் தன் குழந்தையாகக் கருதி, தன்னை கண்ணனை வளர்த்திட்ட தாய் யசோதையாகப் பாவனை செய்து தாய்மை உணர்வு பொங்கிடப் பாடல் பாடிச் செய்தார். ஒரு குழந்தை பிறந்தது முதல் அந்தக் குழந்தையை தாயானவள் எப்படியெல்லாம் வள்ர்த்திடுவாளோ அதையெல்லாம் பெரியாழ்வார் யசோதையாகவே மாறி தன் பாடல்களில் வழியே பாடியிருக்கின்றார். குழந்தைக்கு பாலூட்டுதல், தாலாட்டுதல், நீராட்டுதல், நடை பழக்குதல், துயில் கொள்ளச் செய்தல், இப்படியாக பல படிமுறைகளில் கண்ணனைக் குழந்தையாக்கி தன்னை தாய் யசோதையாகவே மாறி அதில் தன் மனதைப் பறிகொடுத்துப் பாடல் பாடினார் பெரியாழ்வார். கண்ணன் பிறந்து தொட்டிலில் உறங்குகின்றான். அப்போது வெளிப்படும் அவன் திருமேனியின் அழகியல் சிறப்பினை தாய்மை உணர்வு பொங்கிட யசோதையாக நின்று பாடுகின்றார் பெரியாழ்வார். தன் குழந்தை கண்ணனின் அழகினை தன் தோழிப் பெண்களை அழைத்து காண்பித்து மகிழ்கின்றாள் யசோதை. நாமும் அந்தப் பாடல்களில் கண்ணன் அழகினைக் காண்போம் வாருங்கள்.

கண்ணன் மதுராபுரியில் தேவகியின் வயிற்றில் பிறந்து இப்போது ஆயர்பாடி கோகுலத்தில் யசோதையின் அரவணைப்பில் வளர்கின்றான். மாயக் கண்ணன் தொட்டிலில் படுத்திருக்கின்றான். அறிவு என்பது அரும்பாத இளமை பொருந்திய குழந்தையாகிய அவன் தன் தாமரை மலர் போன்ற மென்மையான தன் திருப்பாதங்களைத் தன் வாயிலே இட்டுச் சுவைத்துப் பார்க்கின்றான். அந்த அழகினை வந்து காணும் படி ஆயர்ப்பாடி பெண்களை அழைக்கின்றாள் யசோதை. பாடல் இதுதான்.

*சீதக்கடலுள் அமுது*
*அன்ன தேவகி*
*கோதைக் குழலாள்*
*அசோதைக்குப் போத் தந்த*
*பேதைக் குழவி பிடித்துச்*
*சுவைத்து உண்ணும்*
*பாதக் கமலங்கள் காணீரே*
*பவள வாயீர் வந்து காணீரே*

எனப் பாடுகின்றாள் யசோதை.

**மாயக் கண்ணன் இடையின் அழகு**

கண்ணன் தன்னை ஒத்த பிள்ளைகள் விளையாடி மகிழ்கின்ற பெரிய கைகளையுடைய மதயானைப் பொம்மையின் பாகனாக நடித்து அதை இழுத்துச் செல்லுகின்ற சிறுவனைத் தள்ளிவிட்டு யானைப் பொம்மையை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கின்ற குறும்பு நிறைந்த அந்தக் கண்ணனது பவளமும் முத்துக்களும் நெருக்கமுற கோர்த்துள்ள பொன் நாண் கட்டப்பட்ட இடைப்பின் அழகினை தோழியர்களே வந்து பாருங்கள் என மகிழ்ச்சியோடு அழைத்து நின்றாள் யசோதை.

*இருங்கை மதகளிறு*
*ஈக்கின்றவனைப்*
*பருங்கிப் பறித்துக் கொண்டு*
*ஓடும் பரமன் தன்*
*நெருங்கு பவளமும் நேர் நாணும் முத்தும்*
*மருங்கும் இருந்தவா*
*காணீரே வந்து காணீரே*

எனவாறு அந்தக் காட்சியை காப்பியம் செய்கின்றார் பெரியாழ்வார்.

**மாயம் புரிகின்றவன் தோள்களின் அழகு**

கண்ணன் நீல நிறம் படைத்தவன். அவன் பிறந்து நான்கு, ஐந்து மாதக் குழந்தையாக ஆயர்பாடியில் வளர்ந்து வரும் காலம் தனில் தன்னைக் கொல்வதற்கு வண்டி வடிவில் வந்திருந்த அசுரனைக் கோபத்தால் தன் பிஞ்சுக் கால்களைத் தூக்கி உதைத்துக் கொன்றான். மேலும் வளைந்த கூரிய பற்களையுடைய பூதனை எனும் அரக்கியின் உயிரைப் பறித்த எம் பெருமான் கண்ணனின் வலிமையும், அழகும் பொருந்திய தோள்களை வந்து பாருங்கள் கோபியரே என அழைக்கின்றாள் யசோதைப் பிராட்டி.

**சங்கு, சக்கரம் என்பவற்றை ஏந்தியவன் கரங்களின் எழில்**

யசோதையின் கண் போன்றவன் கண்ணன். அவனை அன்புடன் வளர்த்து வருபவள் யசோதைப் பிராட்டியார். அவன் செழு நீலக் குவளை மலர் போன்ற நிறத்தை உடையவன். அவனது கைகளில் அவன் களவு செய்து உண்ட வெண்ணெய்ப் பசை படிந்துள்ளது. அவனது கரங்கள் மென்மைத் தன்மை கொண்டவை. ஆனால் அந்தக் கரங்களில் கூர்மையான சக்கரத்தினையும், சங்கினையும் வைத்திருக்கின்றான். அத்தகு கைகளின் அழகினை தோழிப் பெண்களே விரைந்து வந்து காணுங்கள் என்கின்றாள் யசோதை. இதைப் பாடல் வழி காண்போமா.


*மைத் தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற*
*செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை*
*நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய*
*கைத்தலங்கள் வந்து காணீரே*

**அருள் தந்திடும் அவன் திருக்கண்களின் அழகியல்**

வானுலகில் நிறைந்திருக்கின்ற தேவர்களுடைய துன்பங்களைப் போக்குவதற்கும், மண்ணுலகில் வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாகப் பிறந்தவன். இரக்கமில்லாத வலிய மனம் படைத்த அசுரக் கூட்டங்கள் அழியும் படி ஆயர்பாடியில் வளர்ந்து வருகின்ற இந்தக் குழந்தைக் கண்ணன் அசுரர்கள் அழியவும், தன் அன்பர்கள் வாழவும் நோக்குகின்ற அழகிய திருக்கண்களின் அழகை வளையல் அணிந்துள்ள தோழியர்களே ஓடி வந்து கண்ணுறுங்கள். அந்தக் கண்ணன் கண்கள் செங்கமலம் போன்ற நிறம் படைத்தவை. காண்பவரைத் தன் கண்களால் மயக்கிடும் செயல் புரிகின்றவன் கண்களின் எழிலை வந்து பாருங்கள் என அழைக்கின்றாள் யசோதை.

*விண் கொள் அமரர்கள் வேதனை*
*தீர முன் மண் கொள் வசுதேவர்*
*தம் மகனாய் வந்து*
*திண்கொள் அசுரரைத் தேய*
*வளர்க்கின்றான்*
*கண்கள் இருந்தவா காணீரே*

என அந்தக் காட்சியை நோக்க முடிகின்றதல்லவா?



**கண்ணன் வயிற்றின் அழகை வந்து காணுங்கள்**

நீல நிறக் கடலைப் போன்ற நிறம் படைத்த கண்ணனுக்கு யசோதை விருப்புடன் தன் முலைகளில் உள்ள பாலை ஊட்டினாள். பின் அவன் குறும்புகள் தாங்கிட முடியாமல் கயிற்றினைக் கொண்டு அவனை வயிற்றுடன் சேர்த்து உரலில் கட்டிப் போட்டாள் யசோதை. அத்தகைய சிறிய வயிற்றின் வடிவழகை வந்து காணுங்கள். இது மட்டுமா? தன்னைக் கட்டிப் போட்ட உரலோடு இழுபட்டுச் சென்று அங்கு நின்ற மருத மரங்களை முறித்துத் தள்ளினான். அத்தகைய நீல நிறம் படைத்த மார்பின் அழகினையும், அழகாகவே அமைந்துள்ள கொப்புழின் வடிவழகையும் விரைவுடன் வந்து காணுங்கள் என்கின்றாள் யசோதை.

இவ்வாறு ஆயர்பாடியில் வந்துதித்த கொண்டல் வண்ணனாகிய கண்ணனின் திருமேனி அழகியல் காட்சிகளை மலர் அணிந்து அழகாய் விளங்கும் கூந்தலையுடைய யசோதை தன் தோழிப் பெண்களை அழைத்துக் காட்டியபடி பெரியாழ்வார் கண்ணன் மீது கொண்ட அன்பினால்பாடிச் செய்த இந்தப் பாடல்களைப் பாடுவோர் கண்ணனின் திருவருள் பெற்று வாழ்வில் இன்புறுவர்.

> ஒரு குழந்தை பிறந்தது முதல் அந்தக் குழந்தையை தாயானவள் எப்படியெல்லாம் வள்ர்த்திடுவாளோ அதையெல்லாம் பெரியாழ்வார் யசோதையாகவே மாறி தன் பாடல்களில் வழியே பாடியிருக்கின்றார். குழந்தைக்கு பாலூட்டுதல், தாலாட்டுதல், நீராட்டுதல், நடை பழக்குதல், துயில் கொள்ளச் செய்தல். இப்படியாக பல படிமுறைகளில் கண்ணனைக் குழந்தையாக்கி தன்னை தாய் யசோதையாகவே மாறி அதில் தன் மனதைப் பறிகொடுத்துப் பாடல் பாடினார் பெரியாழ்வார். கண்ணன் பிறந்து தொட்டிலில் உறங்குகின்றான்.





# கண்களுக்கு விருந்தான ஏழிசை மாலை இசை!

தென்னவன்

ஏரெழுத்துக்களைக் கொண்ட இசையானது உள்ளங்களை மயக்கும் சொல்லிடங்காத தன்மை கொண்டது. குரலில் மட்டுமல்ல நரம்புகள், தோல்கள், குழாய்கள் போன்றவற்றில் இயற்கையின் ஒலிகள், திரண்டோடும் அலைகளின் ஓசை, பறவைகளின் மிருகங்களின் சத்தங்கள் போன்றவற்றை இசையாக வடித்த பெருமை மனித சமூகத்திற்கு உள்ளது.

**பாரம்பரியத்தில் ஒன்றாக இசை**

எமது பாரம்பரிய கலாசாரங்களில் ஒன்றாக இசையும் காணப்படுகிறது. தமிழ் மக்கள் எங்குள்ளார்களோ அங்கெல்லாம் இசையினை வளர்த்தெடுக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு இனத்திற்கென்று கலாசார பண்புகள் காணப்பட்டாலும் அவற்றில் இசை முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. இசைக்கு மயங்காதோரை ஜடம் எனக் கணிப்பிடும் நாம் இசையின் தன்மையை அதன் முக்கியத்தை இன்னமும் உணராமல் இருப்பது வேதனையளிக்கிறது.

தென்மராட்சிமண் நீண்ட கால இசை வளர்ச்சிக்குப் பெரும் புகழ்பூத்த பிரதேசமாகும். பல்வேறு இசைக் கலைஞர்கள் வாழ்ந்து தமது இசையின் மகத்துவத்தை வெளியுலகுக்கு தெரியப்படுத்தி மறைந்தும் மக்கள் மனதில் மறையாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இசையுலகுக்கு முக்கியத்துவம் கொடுத்து தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஏழிசைமாலை நிகழ்வு இன்று 26ஆவது தொடர் நிகழ்வாக அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. தொடர்ச்சியாக மூன்று பாடசாலைகளில் அந்தப் பாடசாலையின் இசை ஆசிரியரின் இசைக் கச்சேரியுடன் அயல் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்களின் இசை நிகழ்வுகளையும் நடத்தி நான்காவது நிகழ்வினை வலய நிகழ்வாக நடத்தி வருகிறது. வலய நிகழ்வுகளில் பாடசாலைக்கு வெளியே இசையாற்றல் உள்ளவர்களை அழைத்து இசை நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களுடன் பாடசாலைகளின் மாணவர்களை ஆசிரியர்களைக் கொண்ட இசை நிகழ்வாக நடத்துவது பாராட்டத்தக்கது.

**ஏழிசை மாலை - 26**

ஏழிசை மாலை கோர்வை 26 வலய நிகழ்வாக நடத்தப்பட்டது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இசை உலகிற்குப் பெருமை சேர்த்த திருகோணமலையின் தென்கயிலை ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு அகத்தியர் அடிகளார் கலந்து கொண்டமை நிகழ்வுக்கு பலம் சேர்த்ததாக அமைந்திருந்தது. புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நிகழ்வில் புலம்பெயர் நாட்டிலிருந்து த.பரமானந்தம் (சுவிஸ்) மற்றும் நிர்மலன் (நோர்வே) ஆகியோரும் நிகழ்வைக் காண வந்திருந்தமை விழாவுக்கு மேலும் பெருமை சேர்த்தது.

நிகழ்வில் தென்மராட்சி மண்ணில் உதித்த இசைத் துறையில் முதுகலைமானிப் பட்டம் பெற்ற போதிலும் துறைக்குச் சம்பந்தமில்லாத அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் திருமதி சந்திரிகா சுஜித்குமாரின் இசைக் கச்சேரி முதலில் இடம்பெற்றது. என்ன தொழில் செய்தாலும் இசையின் வலு தெரிந்தோர் எங்கு சென்றாலும் முன்னிறுத்தப்படுவார் என்பதற்குச் சான்றாக அவரின் ஒவ்வொரு உருப்படியும் அமைந்திருந்தன. 45 நிமிட நேரம் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட அனைவரையும் தன்னிசையால் கட்டி வைத்து ஆடாமல் அசையாமல் கை கால் தாளம் போட்டவண்ணம் அமர வைத்த பெருமை அவரைச் சேரும். துல்லியமான குரல் அதற்கு பக்கபலமாக அணிசேர் கலைஞர்களின் பக்கவாத்தியம் அருமையாக இருந்தது. மண்ணுக்குரிய பெருமையை மாண்புறச் செய்த மங்கைக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.







அடுத்து முதன்முறையாக ஏழிசை மாலை நிகழ்வில் 10 வயது சிறுவனும் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிப்படுத்தலாம் என்பதற்கு உதாரணமாக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் முரளி வருண்ஜியின் பக்திப் பாடல் இடம்பெற்றது. அடுத்து மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மாணவிகளின் ஒரே குரலிலான குழுப்பாடல் அனைவரையும் கவர்ந்திருந்தன. மாணவிகளுக்கு பாராட்டுக்கள்



தெய்வநாயகி கிருஷ்ணசாமியின் தெய்வீக குரலிலான தனி இசை இசைக் குடும்பத்தில் பிறந்து 60 வருடங்களாக இசைத்துறையில் தனிக்கொடியேற்றிய திருமதி தெய்வநாயகி கிருஷ்ணசாமியின் தெய்வீக குரலிலான தனி இசை இடம்பெற்றது. தானே எழுதி இயற்றிய பாடல்களைப் பாடி அனைவரின் கரகோசத்தையும் பெற்று நிகழ்வாக அமைந்திருந்தது. 69 வயதானலும் குரலில் சிறிதளவு மாற்றமின்றி இசையின் மகத்துவத்தை தன்னகத்தே கொண்டுள்ள ஓய்வுநிலை இசையாசிரியைக்கு எமது பாராட்டுக்கள். இசை உலகில் நரம்புத் தொகுதி வாத்தியங்களில் ஒன்றான வயலின் இசையை ஓய்வுநிலை இசை ஆசிரியை திருமதி ரஞ்சனாதேவி சுப்பிரமணியத்தின் மாணவர்களால் இசைத்தமை பார்வையாளர்களின் செவிகளுக்கு இனிய விருந்தாக அமைந்திருந்தது.

இறுதியாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி இசையாசிரியை திருமதி புஷ்பராணி நகுலேஸ்வரனின் மாணவர்களால் மெல்லிசைப் பாடல் இடம்பெற்றது. இசையை முறையாகப் பயின்றால் வீண்போகாது என்பதற்கு பங்குபற்றிய மாணவர்களின் குரலின் இனிமை அனைவரையும் கவர்ந்திருந்தது. ஏழிசை மாலை நிகழ்வுக்கு வழமையை விட இம்முறை அதிகளவானோர் கலந்து கொண்ட போதிலும் வலய நிகழ்வ என்பதால் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் பங்குபற்றுவது நிகழ்வுக்கு பலம் சேர்ப்பதுடன் பல்வேறு மாணவர்களை இசைத்துறைக்கு இழுக்கும் வாய்ப்பினை வழங்கும் என்பது கருத்தாகும்.




# தமிழ் மாருதம்

## பண்பாட்டு நிகழ்வு

கலை இலக்கியச் செயற்பாடுகளை மையமாகக்கொண்டு இயங்கி வரும் தமிழ் மாமன்றம் வருடாந்தம் நடத்தும் பண்பாட்டு பெருவிழாவான 'தமிழ்மாருதம்' வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இம்முறை தமிழகத்திலிருந்து பிரபல பேச்சாளரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருமாகிய இலக்கியசுடர் த.இராமலிங்கம் நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். விபுலானந்தர் சிலை முன்பிருந்து ஆரம்பமாகிய பண்பாட்டு ஊர்வலம் வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தை வந்தடைந்தது. ஏனைய நிகழ்வுகளான வில்லுபாட்டு, ஆடலரங்கம், நாடகம், விவாதம் என்பனவற்றுடன் அமர்வு நடை பெற்றிருந்தது. இலங்கையின் பிரபல புத்தக நிலையங்களின் ஒன்றிணைவில் புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் இடம்பெற்றிருந்தன. (ம-110)










# யாழ்ப்பாணக் கம்பன் விழா -2019 மார்ச் 15,16, 17 ஆகிய தினங்களில்

உயர் கம்பனின் புகழ்பாடி எமது தமிழ்மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் முயற்சியில் அகில இலங்கைக் கம்பன் கழகம் கடந்த 39 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. ஆண்டு தோறும் கம்பனின் பெயரால் இயல், இசை, நாட்டிய விழாக்களை குறித்த கழகம் நடத்தி வருவதை அனைவரும் அறிவர். தற்போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாக அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் முயற்சிகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன. கம்பன் கழகத்தின் கம்பன் விழாக்களின் வரிசையில் 2019 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கம்பன்விழா எதிர்வரும் மார்ச் 15, 16, 17 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்க ளில் நடைபெறவுள்ளது. இந்த விழாவின் காலை நிகழ்ச்சிகள் நல்லூர் கம்பன்கோட்ட மண்டபத்திலும் மாலை நிகழ்ச்சிகள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த ஆண்டு கம்பன் விழாவின் முதலாம் நாளான மார்ச் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினரின் மங்கல இசையுடன் விழா நிகழ்ச்சிகள் இனிதே ஆரம்பிக்கவுள்ளன. சமயத் தலைவர்களான நல்லை ஆதீனத்தின் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், பாதுகாவலன் இதழ் ஆசிரியர் அருட்திரு எயின்சிலி றொசான் அடிகளாரும், முஸிதின் ஜும்மா பள்ளிவாசல் இமாம் மௌலவி எம்.றமீம் அடிகளாரும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பிக்கவுள்ளனர். யாழ். மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதனின் தலைமையில் விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தொடக்கவுரையினை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சினிமா இயக்குநரும் இலக்கியச் சொற்பொழிவாளருமான பாரதி கிருஸ்ணகுமாரின் சிறப்புரை 'முதல் நூலும் முதன்மை நூலும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. நிறைவாக பொன்னாலை சந்திரபரத கலாலய அதிபர் ஸ்ரீமதி ஸ்ரீதேவி கண்ணதாசனின் மாணவிகளின் 'தமிழ் அமுதம்' எனும் நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறவுள்ளது.

### விழாவில் கலந்துகொள்ளும் தமிழ்நாட்டு அறிஞர்கள்

புகழ்பெற்ற பேச்சாளர்களான சினிமா இயக்குநர் பாரதி கிருஸ்ணகுமார், பேராசிரியர் இராம சௌந்தரவள்ளி, கலாநிதி இரா.மாது ஆகிய அறிஞர்கள் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து கொள்வதற்காய்த் தமிழ் நாட்டிலிருந்து வருகை தரவுள்ளனர்.

### விழாவில் கலந்துகொள்ளும் எமது நாட்டு பிரமுகர்கள்

தேசிய ஒருமைப்பாட்டு, அரசகரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய கலாசார அமைச்சர் மனோ கணேசன், வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட், இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஏ.வரதராஜப்பெருமாள், வடமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடமாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடகிழக்கு மாகரண கலை, பண்பாட்டு அலுவலக அமைச்சு முன்னாள் செயலர் சுந்தரம் டிவகலாலா, தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் ஆகிய எம்நாட்டுப் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கம்பன் விழா நிகழ்ச்சிகள்

இந்த ஆண்டு கம்பன்விழாவில் எழிலுரை, நாட்டிய வேள்வி, இலக்கியப் பேருரை, உரையரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், விவாதஅரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### விழாவில் கலந்துகொள்ளும் எமது நாட்டு அறிஞர்கள்

இந்த ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் இ.ஜெயராஜ், கலாநிதி ஆறு திருமுருகன், கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி, செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல், ந.விஜயசுந்தரம், கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன், கவிஞர் ஜின்னாஷெரிபுதீன், கவிஞர் ச.முகுந்தன், கவிஞர் நாக.சிவசிதம்பரம், கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார், ந.ஐங்கரன், விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, த.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### மங்கல இசை

விழாவின் மாலை நிகழ்ச்சிகளில் தினமும் மாலை 4.30 மணி முதல் எமது நாட்டின் பிரபல மங்கல இசைக்கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளன. முதலாம் நாளில் த.உதயசங்கர் குழுவினரதும், இரண்டாம் நாளில் வி.கே. பஞ்சமூர்த்தி குழுவினரதும், மூன்றாம் நாளில் பி. ரஜீபன் குழுவினரதும் மங்கல இசைக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன. (ம-9)

## மகிந்தவுக்கு...

மனு நேற்று முறைப்பாட்டாளர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றில் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் அரச தலைவரால் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சரால் நியமிக்கப்பட்டார். அதையடுத்து அவரால் 48 பேர் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டது. அந்தப் பதவிகளை வகிக்க அவர்களுக்குச் சட்டபூர்வ உரிமை இல்லை என்று அறிவித்து அவர்களைப் பதவி நீக்க வேண்டும் என்று கோரியே யாதுரிமை எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்கலாக 122 பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிபதி அர்ஜீன ஒபேசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவில் கோரப்பட்டவை தற்போது நிறைவேறியுள்ளதால், மனுவைத் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று மனு தாரரான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக முன்னிலையான் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். அதையடுத்து மனுவை மீளப் பெறுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்று அனுமதித்தது. (எ)

## மன்நலப்...

செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார் ஈபிடிபி உறுப்பினர் ரெமீடியஸ்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் இம்மானுவேல் ஆனேல்ட் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினரின் உதவியைப் பெற வேண்டும் என்ற தொனியில் உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் போதைப் பொருள் பரிமாற்றம் அதிகம் நடக்கின்றது. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் உறுப்பினர் ரெமீடியஸைப் பார்த்து, எல்லாவற்றையும் நீங்கள் சொல்லிவிட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நீங்கள் வாதாடுங்கள் என்று கூறினார்.

இங்கு தொழில் சார்பாக யாரும் கதைக்க முடியாது. இந்த சபைக்கு என்று ஒரு முறை இருக்கின்றது. இங்கு தேவையற்ற விடயங்கள் கதைக்கப்படுகின்றது. இங்கு நடப்பதைப் பார்த்தால் சபை உறுப்பினர் சிலருக்கு மனநல மருத்துவ சிகிச்சை தேவை போல் இருக்கின்றது என்று கூறினார் உறுப்பினர் ரெமீடியஸ். (எ-7)

## இலங்கை...

யாது என தமிழ்த் திரையுலகின் பிரபல நகைச்சுவை நடிகர் விவேக் தெரிவித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உரையின் 125 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை குறிக்கும் வகையில் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு மட்டக்களப்பு இராமக்கிருஸ்ண மிசனின் ஏற்பாட்டில் சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது. இதன்போது விவேகானந்தரின் நூல் தொகுதியொன்றும் நடிகருக்கு சுவாமிகளால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் எம்.உதயகுமார், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

(க-21)

## அரசியல்...

திப்படுத்தும் வகையில் ஒரே நாட்டுக்குள் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படாத பட்சத்தில் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாததுடன் உண்மையான நாட்டைக் கட்டியெழுப்பவும் முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இராண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்த போது அரசியல் தீர்வு தொடர்பில் கூறிய பல விடயங்களையே தற்போது நடைமுறைப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. அதனால் இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் மகிந்த ராஜபக்ச முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

2006 ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றி மகிந்த ராஜபக்ச பிரிக்கப்படாத நாட்டில் அனைத்து மக்களும் அதிகாரப் பகிர்வுடன் வாழக் கூடிய அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் நிறைவுக்கு வந்த பின்னர் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவேன் என்றும் கூறியிருந்தார்.

அவரது தரப்பின் முக்கிய உறுப்பினர்களான பசில் ராஜபக்ச, ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்டவர்களும் அதே நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அமைக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த அரசியல் தீர்வு தொடர்பான பரிந்துரைகளும் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன.

இந்த விடயத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் ஒரே நிலைப்பாட்டில் உள்ளனர். அரசியல் தீர்வு விரைவாகக் காணப்பட வேண்டும் - என்றார். (எ-22)

## ஜெனிவாவில்...

இலங்கைக்கு மீளக் கால அவகாசம் வழங்குவது, முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்துவது என்பனது போன்ற உள்ளடக்கங்களுடன் பிரிட்டன், ஜேர்மனி இணைந்து புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபடுட்டுள்ளன. அதற்கு கனடா, அயர்லாந்து நாடுகள் இணை அனுசரணை வழங்குகின்றன. இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட மகிந்த தரப்பினர் அதற்கு நேர் எதிரான நிலைப்பாட்டில் உள்ளனர். ஐ.நா. தீர்மானத்தை நீட்டிக்கக் கூடாது, அதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே அவர்கள் உள்ளனர். இலங்கை அரசின் சார்பாக ஜெனிவா அமர்வுக்கு ஒரு குழு செல்லும் என்று கூறப்பட்டிருந்த நிலையில் அதற்குப் போட்டியாக வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் உள்ளிட்ட குழு ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜெனிவா அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார்.

இது இவ்வாறிருக்க பிரிட்டன் - ஜேர்மனி இணைந்து கொண்டுவரவுள்ள தீர்மான வரைவில் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அலீஸ் கையெழுத்திட்டுள்ளார் என்று அறியக் கிடைக்கின்றது. இதனால் அரச தலைவர் மைத்திரிபால தரப்பு பெரும் இக்கட்டு நிலையை அடைந்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜெனிவாவுக்கு அனுப்பும் குழுவினர் அங்கு சென்று என்ன விடயத்தைப் பேசுவது என்பதில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் கோபமுற்றுள்ளார் என்று கொழும்பும் தகவல்கள் கூறுகின்றன.

தலைமை அமைச்சர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சரின் உத்தரவைப் பின்பற்றியே ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தீர்மான வரைவில் கையெழுத்திட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. அதனால் கடும் கோபமுற்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வதிவிடப் பிரதிநிதியை நாட்டுக்குத் திருப்பி அழைக்கும் சாத்தியம் காணப்படுகின்றது என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் நாள்களில் இந்த விடயம் கொழும்பிலும், ஜெனிவாவிலும் பெரிதாக வெளிப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

## பரிந்துரைகளை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுக்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ் இனத்தின் அக்கறைகள் தொடர்பாக இனிமேல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பேசவே முடியாது என்று இந்த நாட்டின் அரச தலைவர் பகிரங்கமாகக் கூறி வரும் நிலையில் அவரது பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்பட்டுள்ள தாங்கள் தமிழர் நலன் சார்ந்து எந்த அளவுக்குப் பேச முடியும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

எனினும் தங்களின் கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் எமது கருத்தை மிகச் சுருக்கமாக முன்வைக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையால் நிறைவேற்றப்பட்ட 2015 ஆம் ஆண்டில் 30/1 ஆம் இலக்கம் மற்றும் 2017ஆம் ஆண்டின் 34/1 தீர்மானங்கள் அப்படியே முழுமையாகவும், துரிதமாகவும் இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வலியுறுத்தி உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதே எமது கருத்தாகும் என்று ஆளுநருக்குக் கையளித்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## தீயில் எரிந்து...

துள்ளது.

மனநிலை பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் பற்ற வைத்த தீயாலேயே வீடு தீப்பற்றி எரிந்தது என்று கூறப்படுகின்றது.

தீயால் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் சுதாரித்துக் கொண்டதால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸில் முறையிடப்பட்டமைக்கு அமைவாகப் பொலிஸார் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணை விசாரணைக்குட் படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3)

## இலங்கைக்கு...

அயர்லாந்து, மொன்ரெனிக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற தலைப்பில் இந்தத் தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய 2015ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43ஆவது கூட்டத் தொடரில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விரிவான அறிக்கை ஒன்று 2021 மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் விவாதம் ஒன்று நடத்தப்படும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை எடுத்துள்ள முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-22)

## விபத்தில்...

சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மந்துவில் 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.கிறீஞீனாள் (வயது 75) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீதியால் பயணித்தபோது உந்துருளி ஒன்று அவர் மீது மோதித் தப்பிச் சென்றிருந்தது. உந்துருளியும், விபத்தை ஏற்படுத்தியவரும் அடையாளம் காணப்படவில்லை. படுகாயமடைந்தவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி3)

## நான்கு...

வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றபோது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 4 வகையாகச் செயற்பட்டுள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெற்ற போது ஆதரவாக 119 வாக்குகளும், எதிராக 76 வாக்குகளும் அளிக்கப்பட்டன. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு வரவில்லை. சிலர் வந்தும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 11 பேர் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். கூட்டமைப்பின் 3 உறுப்பினர்கள் சபைக்கு வரவில்லை. ஒருவர் எதிராக வாக்களித்தார். ஒருவர் சபையில் இருந்தும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ அமைப்பின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆதரவாக வாக்களித்தார். மற்றைய நாடாளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் சபையில் இருந்தபோதும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீநேசன், ஈ.சரவணபவன், நடேசு சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் சபையில் பிரசன்னமாகியி ருக்கவில்லை. சிறீநேசனின் தாயாருக்கு திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாகச் சபைக்கு வரத் தாமதம் ஆகியது என்று கூறப்படுகின்றது. (எ-105)

## மொட்டுக்...

நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை முழுமையாக ஒழிப்பது தொடர்பில் கொள்கை அளவில் நாம் இணங்குகின்றோம்.

ஆனால் அதைச் செய்வதற்கு ஆட்சியில் உள்ள இந்த நாடாளுமன்றுக்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது. தற்போதுள்ள நாடாளுமன்றுக்கு அரசமைப்பை மாற்றியமைப்பதற்கோ அல்லது புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்கோ எந்தவிதமான உரிமையும் இல்லை என்ற நிலைப்பாட்டில் தான் நாம் உள்ளோம்.

அடுத்து வருகின்ற தேர்தலில் எந்த வேட்பாளராக இருந்தாலும் அவர் பொதுமக்கள் முன்னணியின் ஊடாகவே நிறுத்தப்படுவார். அதில் மாற்றமில்லை என்றார்.

அதேவேளை, இந்த விவகாரத்தில் மகிந்த ராஜபக்ச அணியினரும் மைத்திரிபால சிறிசேன அணியினரும் ஏட்டிக்குப் போட்டியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். (த-61)





அக்கராயன் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அக்கராயன் சவாரித் திடலில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து 78 சோடிக் காளைகள் பங்கேற்றிருந்தன. இதில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு ரசித்தனர். (ம–21)



கடற்கரை கபடி

# சென்.பீற்றஸ் வி.க. வெற்றி

கிளிநொச்சி, மார்ச் 13

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கடற்கரைக் கபடிப் போட்டியில் சென். பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

பச்சிலைப்பள்ளி பொதுவிளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில், ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

# போட்டி முடிவுகள்

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய திலக்சன் வெற்றி பெற்றார்.

மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய நிலக்சனை 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டார் திலக்சன்.

★★★

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆடிய றெமின்சன் - துசாந்தன் இணை வெற்றி பெற்றது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நிசாந்தபாலன், திலக்சன் இணையை 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டனர் றெமின்சன் - துசாந்தன் இணை.

★★★

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் களுக்கான கலப்பு இரட்டையர் ஆட்டத்தில், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய நடா, திலக்சன் இணை வெற்றி பெற்றது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய காண்டீபன், ராகவி இணையை 2:0 என்ற செற்கணக்கில் தோற்கடித்து இந்த வெற்றியை நடா, திலக்சன் இணை தமதாக்கியது. (ஒ.23)

கரப்பந்தாட்டம்

# சென்.தோமஸ் ஆர்.சி. வெற்றி பெற்றது



கரணவாய், மார்ச் 13

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுப் பெண்கள் பிரிவில் சம்பியனாகியது சென்தோமஸ் ஆர்.சி வித்தியாலய அணி.

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென்தோமஸ் ஆர்.சி வித்தியாலயமும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் 25:17, 25:16 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று சம்பியனாகியது சென்தோமஸ் பாடசாலை மகளிர் அணி. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பெற்றது. (ஒ.108)



# பாடும்மீன் வி.க. கலைவாணி மோதல்

## சமநிலையில் நிறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 13

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணிக்கும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில், கலைவாணி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டு அணியும் கோல்கள் அடிப்பதற்கு கடுமையாக முயற்சித்தன. இருப்பினும் கோல்கள் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. இறுதியில் கோல்கள் எதுவும் பதிவு செய்யப்படாமல் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. (ஒ.23)

# இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கண்ண்கி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

★★★

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

★★★

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலைவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

# தோல்வி காயப்படுத்தி விட்டது

## கோக்லி உருக்கம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்ற நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 358 ஓட்டங்கள் குவித்தும் ஆஸ்திரேலியா அணி அதனை இலகுவாக துரத்தியடித்தும் வெற்றி பெற்றது. தோல்வி குறித்து அணித் தலைவர் கோக்லி தெரிவிக்கையில்:



இறுதியில் சில பந்துப்பரி மாற்றங்களில் பிடியெடுப்பு வாய்ப்புக்களைத் தவற விட்டோம். ஹேண்ட்ஸ் ஹோம்ப், கவாஜா சிறப்பாக ஆடினார்.

கடந்த போட்டியில் பனிப்பொழிவு இருக்கும் என்றனர். ஆனால் அது தவறானது. இங்கு அவர்கள் நன்றாக ஆடினர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். எந்தப் பகுதியில் அடிக்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுத்து அடித்தனர். முதலில் துடுப்பெடுத்தாட விரும்பினோம், அதில் எந்த விதக் குழப்பமும் இல்லை. 5ஆவது பந்து வீச்சாளர் தேவையில்லை என்று நினைத்தோம். விஜய் சங்கர், சாஹல் பனிப்பொழிவில் வீசினால் கடினம்தான் ஆகவேதான் பனிப்பொழிவுக்கு முன்பாக அவர்களது பந்துப்பரி மாற்றங்களை வீசி முடித்துவிட நினைத்தோம்.

ஆனால் இறுதியில் மிகவும் ஈரமாக இருந்தது. முதல் பகுதி பந்து வீச்சு பரவாயில்லை. இறுதியில் அவர்கள் அடிக்கத் தொடங்கியவுடன் கடினமானது.

ஸ்டொம்பிங் வாய்ப்பு மிக முக்கியமானது. களத்தடுப்பிலும் சொதப்பினோம். இறுதிப் போட்டி நிச்சயம் சவாலாக இருக்கும், மிகச் சிறப்பாக ஆட வேண்டும். இந்த ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 2 முறை கண்கள் திறக்கப்பட்டு விட்டன. இந்தத் தோல்வி பெரிதும் காயப்படுத்தி விட்டது - என்றார்.



## ரெய்லர் இரட்டைச் சதம்

# நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டி வெலிங்ரனில் இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 12 ஓட்டங்களாலும், இன்னிங்ஸாலும் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

முதல் இரண்டு நாள் ஆட்டம் மழையால் இடைநிறுத்தப்பட்டது. மூன்றாம் நாளில் பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 211 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் முதல் இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து மூன்றாவது நாள் ஆட்டத்தின் முடிவில் 2 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது. நேற்றுமுன்தின நான்காம் நாள் நியூசிலாந்து அணி 6 இலக்குகளை இழந்து 432 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் மொகமட் மிதுன் 25 ஓட்டங்களுடனும், சர்கர் 12 ஓட்டங்களுடனும் நேற்றைய ஐந்தாம் நாளுக்காகக் களமிறங்கினர். அதிகபட்சமாக அணித் தலைவர் முகமத்துல்லா 67 ஓட்டங்களையும், மிதுன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். அணி 209 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 12 ஓட்டங்களாலும் இன்னிங்ஸாலும் தோல்வியடைந்தது.



## மட்ரிட்டின் பயிற்சியாளராக மீண்டும் சிடேன் வருகை

ரியல் மட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக சிடேன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் சிடேனுக்கும் ரியல் மட்ரிட் அணியின் நிர்வாகத்துக்கும் இடையில் ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக ரியல் மட்ரிட்டில் இருந்து இவர் விலகியிருந்தார்.

2016ஆம், 2017ஆம், 2018ஆம் ஆண்டுகளில் ரியல் மட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த சிடேன் இந்த மூன்று வருடங்களிலும் அந்த அணி ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரைக் கைப்பற்றியது.

சிடேனின் விலகலை அடுத்து ரியல் மட்ரிட் அணி தொடர்ந்து பல்வேறு தோல்விகளைச் சந்தித்து வந்தது. இந்த நிலையில் சிடேன் மீண்டும் அணிக்கு வந்தது ரியல் மட்ரிட் அணி மீளவும் புத்துயிர் பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

# அமெரிக்க சைக்கிள் ஓட்ட வீராங்கனை சாவு

அமெரிக்காவைச் சேர்ந்த 23 வயதான பிரபல சைக்கிள் ஓட்ட வீராங்கனை கெல்லி கேட்லின் கடந்த வியாழக்கிழமை சாவடைந்தார். இவர் 3 முறை உலகச் சம்பியன் பட்டத்தை வென்றதோடு, 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று அமெரிக்க அணியில் அங்கம் வகித்தவர் ஆவார்.

சைக்கிள் ஓட்டத்தில் தொடர்ந்து சாதனை படைத்து வந்த கேட்லினுக்கு கடந்த ஆண்டு இறுதியில் அடுத்தடுத்து நடந்த விபத்துக்கள் சோதனையாக அமைந்தது. லேசான மூளைய அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாத இறுதியில் தற்கொலைக்கு முயன்று காப்பாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் சைக்கிள் ஓட்டத்தில் இருந்து இவர் விலகினார். தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்பில் இருந்த அவர் கடந்த வியாழக்கிழமை மரணம் அடைந்தார் என்று அவரது சகோதரர் கொலின் தனது ருவிற்றர் தளத்தில் வெளியிட்டார்.



# இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் டுமினி, மார்கிராம் இணைப்பு

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் முதல் மூன்று போட்டிகளிலும் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்று 3:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இடம்பெறவுள்ள இரண்டு போட்டிக்கான தென்னாபிரிக்கா அணியில் மார்கிராம் இணைக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டியில் சிறப்பாக விளையாடி வரும் மார்கிராம், கடந்த நவம்பர் மாதத்துக்குப் பின்னர் ஒருநாள் கிரிக்கெட் அணியில் இடம்பெறவில்லை. இவர் உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் விளையாடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளார். இந்த இரண்டு போட்டியிலும் சிறப்பாக விளையாடினால் உலகக் கிண்ணத்துக்கான தென்னாபிரிக்கா அணியில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது.

காயத்தில் இருந்து மீண்டுள்ள டுமினியும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இன்டியன் வேல்ஸ்

# ஹாலெப் முன்னேற்றம்

'இன்டியன் வேல்ஸ்' பன்னாட்டு ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் இடம்பெற்று வருகின்றது. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்றில் ருமேனியா நாட்டு வீராங்கனை சிமோனா ஹாலெப், தகுதிச் சுற்றின் மூலம் முதன்மை சுற்றுக்கு முன்னேறிய உக்ரைன் நாட்டு வீராங்கனை கட்டேரினா கொஸ்லோவாவை எதிர்கொண்டார்.

இதில் சிமோனா ஹாலெப்புக்கு கட்டேரினா கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் முதல் செற் ஹாலெப் 7:7 ,6:3 எனக் கைப்பற்றினார். 2ஆவது செற்றையும் கடும் போராட்டத்துக்குப் பின்னர் 7:5 என்ற கணக்கில் கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் ஹாலெப் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் -முகுருசாவை எதிர்கொண்டார். இதில் 3:6, 0:1 என செரீனா பின்தங்கிய நிலையில், உடல் நலக்குறைவால் இடைநடுவில் போட்டியில் இருந்து வெளியேறினார். இதனால் முகுருசா வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்


மண்ணுலகில் 24 - 05 - 1953

விண்ணுலகில் 11 - 02 - 2019



மண்ணுலகில் 03 - 05 - 1934

விண்ணுலகில் 01 - 01 - 2019



கடந்த 11.02.2019 இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர்
## நடேசு தர்மகுலசிங்கம்
(புண்ணியமூர்த்தி)

கடந்த 01.01.2019 இறைவனடி சேர்ந்த
எமது குடும்பவிளக்கு
அமரர்
## நடேசு பூமணி



புண்ணியம் செய்யவென பூமிக்கு வந்த
பூமணியின் புதல்வனே எண்ணிய செயலெல்லாம்
ஏற்றம் காணச் செய்த எண் குணத்தவனே
உம்மை எண்ணி என்றென்றும் உம்
நினைவுகளுடன் நாம்......



அன்னாரது (நடேசு தர்மகுலசிங்கம் புண்ணியமூர்த்தி) அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.03.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் இன்றைய தினம் நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதையும் 16.03.2019 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இவர்களின் இறுதிச்சடங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி, இணையதளங்கள், முகநூல், பத்திரிகைச் சுவரொட்டி, பதாகைகள் ஊடாக அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் உரிய நேரத்தில் குடும்பத்திற்கு ஆறுதலும் உறுதுணையுமாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புகையிரத வீதி,
கோட்டைக்காடு, மல்லாகம்.

(CS 23969) (14.17)

குடும்பத்தினர்.
077 917 7060


ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

நியத ஜய

சீட்டிழுப்பு வாரம் : 753 வர்ணம் : ஆரஞ்சு

திகதி : 2019.03.12

வெற்றி இலக்கங்கள் 50 56 61 63 ஆங்கில எழுத்து M

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 23,342,692/-

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 12.03.2019 | 2475 | சிவப்பு |

மீனம்

வெற்றி இலக்கங்கள் 12 16 42 43

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 664, 856/=

13.03.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களுக்கும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 939

சீட்டிழுப்பு திகதி 2019.03.11 திங்கட்கிழமை

I 08 56 62 68

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,434,288/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

கோடீபதி ஷனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 418

வர்ணம் : இளஞ்சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 2019.03.12

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 116,751,618/-

T 02 03 13 17

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 552

வர்ணம் : நீலம்

சீட்டிழுப்பு திகதி: 2019.03.12

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,296,175/-

வெற்றி இலக்கங்கள் 18 33 56 67 ஆங்கில எழுத்து W

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது நேரடி அழைப்பு - 0114 824 824, 0112 333 778

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111



நளினின் Mega Offers

HP யின் 2018 இற்கான
சிறந்த வர்த்தக பங்காளர் விருதினை வென்ற
வட மாகாணத்தின் ஒரே ஒரு நிறுவனம்

Nalin Information Technologies (PVT) LTD.



Recognition Award
GEO - X PARTNER CATEGORY
PC FY 2018
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD

HP யின் சிறந்த வர்த்தக பங்காளரான
விருதினை தொடர்ந்து மூன்றாவது
முறையாகவும் பெற்றுக்கொண்டதை
முன்னிட்டு HP கணினிகள் (PC), Laptops
Workstation, Printers களிற்கு 10% விலை
கழிவுகளை பெற்றுகொள்ளலாம்.

10%

இச் சலுகை 3 நாட்களுக்கு மட்டுமே!

கோடைகாலத்தில் நளினின் குளிர்ச்சியான விலைக்கழிவு

10% OFF கழிவுகள்

EZVIZ



நம்பகத்தரமான
உத்தரவாதம் !!!

HIKVISION DEALER PARTNER

alhua FOXCAM TVT

CCTV Camera System [கண்காணிப்பு கமராகள்]

Video Door Phones | Finger Print System | Wireless Alarm Systems

NALIN Information Technologies Pvt Ltd.

No.195/2 Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1121, 077 766 7975, 021 222 4994



தேவை

யாழ்.திருநெல்வேலியில்
இடம் பெறும் கட்டுமான வேலை
யொன்றில் மாபிள் பதிப்பதற்கு
மேசன் தேவை. திறமையான,
முன்னனுபவம் கொண்டவர்கள்
மட்டும் தொடர்பு கொள்ளவும்.

077 545 4137

SAAMSON இன் 3 மாத சனி, ஞாயிறு
ஆங்கிலப் பயிற்சிநெறி

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16.03.2019 சனி

பிரிவு 01 : காலை 08-10 பிரிவு 02 : மாலை 03.05

வாரநாள் (செவ்வாய் - வியாழன்) - பிரிவு காலை 08.30 - 10.00

நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

வீடு வாடகைக்கு உண்டு

நவீன வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு. இரண்டு பக்கம் வீதி, 1 ஏக்கர் காணியில் அமைந்துள்ள 5 அறைகள், 3 மலசலகூடம், வாகனத்தரிப்பிடம் நிகழ்வுகள், கூட்டங்கள் நடத்தக்கூடிய 2Hall மண்டபம் உண்டு. நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை

அமைவிடம் - A9 வீதி, பரந்தன் சந்தியில் இருந்து 1KM தூரத்தில் குமரபுரம் 2, 3 ஆம் வீதியில்

மேலதிக விவரம் தொலைபேசியில் பேசலாம்.

077 534 5111/ 076 331 5434

FaceBook இல் Photo பார்க்கலாம்.

Fb Name : Magitha Saththiyananthan facebook.com
Mail : magiths13@gmail.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.